janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி


மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 பிப்ரவரி 13 - 19 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 45




**கார்ப்பரேட் ஆதரவு பட்ஜெட்**

கார்ப்பரேட் மற்றும் பெரு நிறுவனங்களிடம் பா.ஜ.க அரசாங்கம் கொண்டிருக்கும் விசுவாசத்தை மீண்டும் ஒருமுறை >>> ப 08



**வெற்றி ஒன்றே குறிக்கோள்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய மூன்று அமைப்புகளுக்கான >>> ப 02



**ஆளுநரே திரும்பிப் போ**

கெடுவல்லான் என்பது அறிகதன் நெஞ்சம் நடுவொரீஇ அல்ல செயின் தன் நெஞ்சம் நீதியை விட்டுவிட்டு அநீதி செய்ய >>> ப 03



# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர்கள்

மொத்த வேட்பாளர்கள் **190**



தேர்தல் நாள் **19.02.2022**

**14** மாநகராட்சிகளில் **30** வேட்பாளர்கள்

**48** நகராட்சிகளில் **63** வேட்பாளர்கள்

**54** பேரூராட்சிகளில் **97** வேட்பாளர்கள்

## வாக்களிப்பீர் கதிர்அரிவாள் சின்னத்திற்கே

மற்றும் தோழமை கட்சிகளின் சின்னங்களுக்கு வாங்களிக்க வேண்டுகிறோம்.

## எதிரும் புதிரும்




சொல்லில் ‘பொற்காலம்.’ செயலில் ‘கற்காலம்.’

### ஆலப்புழாவில் டிசம்பர் 17, 18, 19, 20 தேதிகளில்

## ஏஐடியூசி அகில இந்திய மாநாடு




ஏஐடியூசி அகில இந்திய பொதுக் குழு கூட்டம் ஹைதராபாத்தில் பிப்ரவரி 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. மோகன் சர்மா, ஆதி நாராயணா ஆகியோர் தலைமை வகித்தனர். பொதுச்செயலாளர் அமர்ஜித் கவுர் அறிக்கையை முன்வைத்து பேசினார்.

ஏஐடியூசியின் 42வது அகில இந்திய மாநாட்டை கேரள மாநிலம் ஆலப் புழாவில் டிசம்பர் 17, 18, 19, 20 தேதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்தியாவின் தொழிலாளர் பிரச்சினைகள், சமூகம், பொருளாதாரம், அரசியல் குறித்த 23 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.




# வெற்றி

## ஒன்றே குறிக்கோள்

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய மூன்று அமைப்புகளுக்கான உறுப்பினர்களையும் அதனைத் தொடர்ந்து தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.**

முதற்கட்டமாக உறுப்பினர்களுக்கான தேர்தல் வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ளது.

இத் தேர்தல் என்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் என்பதனை சென்ற கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலைப் போன்று அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களது கட்சிக்குரிய செல்வாக்கை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொண்டு வருவது இயல்பானதே!

பாஜக – அதிமுக மீது சவாரி செய்திட மேற்கொண்ட முயற்சி தோற்றுப் போய் உள்ளது.

பா.ஜ.க. தனித்து போட்டி என்று அறிவித்துள்ளது. வகுப்புவாத சக்தி தனித்து விடப்பட்டுள்ளது உண்மைதான் என்றாலும், தங்களது தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க. தொடர்கின்றது என்று தெரிவித்துள்ளது.

இதனை அ.தி.மு.க. மறுக்கவில்லை என்பது மட்டுமல்ல, ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை அதிமுக வரவேற்று பாராட்டி அறிக்கை வெளியிட்டு உள்ளது. மேலும் நீட் நுழைவுத் தேர்வு குறித்து, முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை பா.ஜ.க.வின் பகை வந்துவிடக்கூடாது என்கிற அச்சத்தின் காரணமாக பா.ஜ.க. வுடன் இணைந்து கூட்டத்தை புறக்கணித்துள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பா.ஜ.க., அ.தி.மு.க. உடன் பயணித்த பாமக தனித்து போட்டியிடுகின்றது. த.மா.கா. மட்டும் பட்டும் படாமல் அதிமுகவை ஆதரிப்போம் என்று அறிவித்துள்ளது. வகுப்புவாத சக்திகளின் முகாம் இத்தேர்தலில் பிளவுபட்டு தனித்தனியாக போட்டியிடுகின்றது.

அதே நேரத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தொடர்ந்து ஒன்றுபட்ட தேர்தல் களம் காண்பது வரவேற்கத்தக்கது.

நகர்ப்புற அமைப்புகளின் உறுப்பினர்களை தேர்வு செய்திட முதலில் வார்டுகளை ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

இது குறித்து நமது கட்சியின் மாநிலத் தலைமை சார்பில் கடந்த டிசம்பர் 19ஆம் நாள் முதலமைச்சரிடத்தில் விவாதித்தது.

மாவட்ட அளவில் சுமூகமாக பேசி முடித்திட, மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, ஆதலால் மாவட்டத்தில் பேசுங்கள் என தெளிவாக முதலமைச்சர் கூறினார்.

நம்மிடம் கூறிய முடிவை மற்றத் தோழமைக் கட்சித் தலைவர்கள் முதலமைச்சரை அணுகிய போதும் தெரிவித்துள்ளார் என்று தெரிகின்றது.

முதலமைச்சர் கூறிய அடிப்படையில் நமது மாவட்ட தோழர்கள் தி.மு.க. மாவட்ட பொறுப்பாளர்களை அணுகி உடன்பாடு கண்டுள்ளனர்.

தொகுதி பங்கீடு அல்லது வார்டு பங்கீடு என்பது எப்போதும் இனிப்பாக இருந்தது இல்லை.

நாம் கோரும் எண்ணிக்கையை முழுவதுமாக பெற முடியாது. எண்ணிக்கை முடிந்த பின்னர் எண்ணிக்கைக்குரிய நாம் கோரும் வார்டுகளை பெறுவதிலும் நெருக்கடிகள் இருக்கும். இது இன்று ஏற்பட்ட அனுபவம் மட்டுமல்ல, தொடர்ந்து நடைபெறக் கூடியதுதான். கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் ஒவ்வொரு முறையும் சுமுகத் தீர்வை எட்டியுள்ளோம் என்பதனை கணக்கில் கொண்டும், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் வார்டுகளின் எண்ணிக்கையும், எத்தகைய வார்டு என்பதும் முடிவாகி உள்ளது.

இத்தகைய முடிவை எட்டுவதற்கு நமது மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்களும், மாவட்டச் செயலாளர்களும் பெரும் முயற்சிகளை இடைவிடாது மேற்கொண்டு தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அமைச்சர் பெருமக்களுடன் பேசி சுமூக முடிவுகளை எட்டியது பாராட்டுக்குரியது.

நமது கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள வார்டுகளுக்கு வேட்பாளர்களை மாவட்டக் குழுக்கள் தேர்வு செய்து, மாநில மையத்திற்கு அனுப்பியதன் அடிப்படையில், வேட்பாளர் பட்டியலை மாநில மையம் பல கட்டங்களாக வெளியிட்டுள்ளது. அவை முழுவதும் நமது ஜனசக்தியில் இடம்பெற்றுள்ளதை அறிவீர்கள்.

ஒவ்வொரு கட்சியும் எத்தனை இடங்களில் போட்டியிடுகின்றன? அதன் எண்ணிக்கை என்ன? யார் அதிக இடங்களில் போட்டியிடுகின்றார்கள்? என்பது விவாதப் பொருளாக இருப்பது இயல்பானது.

போட்டியிடும் எண்ணிக்கை குறித்து சில நாட்கள் விவாதம் நடைபெறும். அத்தகைய விவாதம் நிரந்தரமானது அல்ல!

எது நிரந்தரமானது என்பதே முக்கியமாகும். போட்டியிட்ட இடங்களில் எண்ணிக்கையைக் காட்டிலும், எத்தனை இடங்களில் வெற்றி பெற்றோம் என்பதே மிகுந்த முக்கியத்துவம் உடையது என்பதனை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஒரு மாவட்டத்தில் நம்மை விட நமது அணியில் உள்ள ஒரு கட்சி கூடுதலான இடங்களில் போட்டியிடக் கூடும். மற்றொரு மாவட்டத்தில் நாம் அதிக இடங்களில் போட்டியிட வாய்ப்புகள் கிடைத்திருக்கக் கூடும்.

இத்தகைய எண்ணிக்கை ஒரே சீராக இருக்க எதார்த்தம் இடம் தராது. மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுப்படும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. ஆகவே போட்டியிடக்கூடிய எண்ணிக்கை என்பது முக்கியம் என்பது மறுப்பதற்கில்லை. இத்தகைய எண்ணிக்கை என்பது ஒவ்வொரு கட்சிக்கும் மாவட்டத்திலுள்ள பலத்திற்கு ஏற்பவும், அதனை விட மிக முக்கியமானது நல்ல அணுகுமுறையும் தேவைப்படுகின்றது என்பதனை நாம் பேச்சுவார்த்தை அனுபவத்தில் உணர்ந்து இருக்க முடியும்.

இவைகள் முடிந்துவிட்டன, பெறப்பட்ட எண்ணிக்கை நமது பலத்திற்கு ஏற்றதா? அல்லது குறைவானதா என்பது குறித்து விவாதிப்பதற்கு நேரம் இதுவல்ல.

தற்போதைய பிரச்சனை என்பது ஒன்றே ஒன்றுதான். அவை நாம் எத்தனை இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளுடன் களம் காண ஆயத்தமாக வேண்டும்.

தோழமை கட்சிகளிடமிருந்து பெற்ற இடங்கள் அனைத்திலும் வெற்றி வாகை சூடிட நாம் என்ன செய்யவேண்டும்? நம்மிடம் இருக்கும் ஆயுதம் என்ன? என்பது குறித்து நாம் சிந்தித்து திட்டமிட வேண்டும்.

எவரிடத்திலும் இல்லாத சக்தி நம்மிடத்தில் இருக்கின்றது. அத்தகைய சக்தி என்பது உழைப்பு என்ற பேராயுதமாகும்!

**நமது தோழர்கள் நமக்குரிய பல்வேறு பணிகளை இருவார காலத்திற்கு ஒத்தி வைத்து அனைத்து தோழர்களும் ஒன்று பட்டு ஓரணியாய் கரம் கோர்த்து களமிறங்கி, வெற்றியை உறுதி செய்திட உறுதி ஏற்று தேர்தல் எனும் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும்!**

நமது கட்சிக்குரிய இடங்கள் மட்டுமல்ல, நமது தோழமைக் கட்சிகளும் அவரவர்களுக்குரிய ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் வெற்றி பெற வேண்டும். மொத்தத்தில் நமது அணி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற வேண்டும்.

நமது அணியின் வெற்றி என்பது நமது கொள்கைக்கு கிடைத்திட்ட மகத்தான வெற்றியாக அமைந்திடல் வேண்டும்.

சமூக நீதிகள் புறக்கணிப்படுகின்றது. ஜனநாயகம் நிலைத்து, நீடிக்குமா என்கின்ற கேள்வி எழுந்துள்ளது.

காலங்காலமாக கட்டிக் காப்பாற்றப் பெற்றுவரும் மதச்சார்பின்மை என்கிற மகத்தான கொள்கையின் ஆணி வேரில் சிறிதும் அச்சமற்ற முறையில் வெந்நீரை ஊற்றி சாகடிக்கும் சாகசங்கள் நடைபெற்று வருகின்றன.

அரசியலமைப்புச் சட்டம், அது உருவாக்கிய நீதிமன்றம், தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி உள்ளிட்ட அனைத்தும் கூச்சநாச்சமின்றி சீர்குலைக்கும் செயல்கள் அரங்கேறி வருகின்றன.

**வகுப்புவாத கும்பல் தனக்கு கிடைத்திட்ட ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி ஏழை, -எளிய அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உழைப்பாளி மக்களுக்கு எதிராக, விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு எதிராக, நடுத்தரப் பகுதி மக்களுக்கு எதிராக போர் தொடுத்து வருகின்றது.**

2022–23 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை யாருக்கானது என்பது வெட்ட வெளிச்சமாகி பா.ஜ.க. அரசின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டிற்கு மேலாக விவசாயிகள் போராடி, போராட்டத்தில் கொடுத்திட்ட வாக்குறுதியை ஒன்றிய அரசு நிறைவேற்றாமல் துரோகமிழைத்துள்ளது.

மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் ஒருவேளை சோற்றைப் பெற்று வரும் விவசாயத் தொழிலாளர்களுக்கு பெரும் அநீதி இழைக்கக் கூடிய முறையில் இத்திட்டத்திற்கான நிதியை சென்ற ஆண்டைக் காட்டிலும் 25 சதவீதம் குறைத்து துரோகமிழைத்துள்ளது.

மாதச் சம்பளம் பெறும் மத்தியதர பகுதியினர் தங்களுக்கு வருமான வரிச்சலுகை வேண்டும் என போராடி வருகின்றனர். இவர்களது போராட்டத்தின் நியாயத்தை ஏற்று ஆதரித்த அன்றைய எதிர்க்கட்சியான பா.ஜ.க. இன்று எச்சலுகையும் வழங்க முன்வரவில்லை.

ஆனால் யாரிடம் அதிக வரிவசூல் செய்ய வேண்டுமோ, அத்தகைய பெருநிறுவனங்களுக்கு 12 சதவீத வரியை 7 சதமாகக் குறைத்து தாங்கள் யாருடைய பிரதிநிதி என்பதனை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை கொடுப்போம் என முழங்கியவர்கள் இன்று வேலையில் இருப்பவர்களை வீட்டிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். வரும் ஐந்து ஆண்டுகளில் 60 லட்சம் பேருக்கு வேலை வழங்குவோம் என்று சிறிதும் வெட்கம் இல்லாமல் தெரிவிக்கின்றார்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி என்பதை தற்போது ஆண்டுக்கு 12 லட்சமாக சுருக்கிவிட்டார்கள்.


இத்தகைய மக்கள் விரோத நிதிநிலை அறிக்கையைத்தான் ஆண்ட அ.தி.மு.க. ஆதரித்து பாராட்டி மகிழ்கிறது. இத்தகைய சக்திகள் மக்கள் விரோத சக்திகள், நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு எதிரான சக்திகள் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அத்தகைய கடமையை நிறைவேற்ற நமக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தலாகும்.

இத்தகைய அரியதோர் நல்வாய்ப்பை பயன்படுத்தி நமது வெற்றியை, நமது அணியின் வெற்றியை உறுதிபடுத்திட களம் காண்போம்.

வெற்றி ஒன்றே நமது குறிக்கோளாகும்! அதனை உறுதிபடுத்திட, உத்தரவாதப்படுத்திட இன்றே இப்போதே களம் காணுவோம்; வெற்றி பெறுவோம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**




# தீயோடு விளையாட வேண்டாம்!

# ஆளுநரே திரும்பிப் போ!



**த.லெனின்**

**கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்**

தன் நெஞ்சம் நீதியை விட்டுவிட்டு அநீதி செய்ய எண் ணினால் அதுவே தான் கெடப் போவதற்கு உரிய அறிகுறி என்கிறார் திருவள்ளுவர்.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பொழுது நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்து நீட் விலக்கிற்கான அதன் பரிந்துரைகளை உரிய தரவுகளோடு சட்டமன்றத்தில் விவாதித்து சட்டமுன்வடிவாக நிறைவேற்றி கடந்த செப்டம்பர் மாதம் அதனை ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பியது.

இந்நிலையில் தி.மு.க. தலைமையிலான தமிழக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இச்சட்ட முன்வடிவு குறித்து உள்துறை அமைச்சரைச் சந்திப்பதற்கு சென்றபோது, பத்து நாட்களுக்குப் பிறகே காலதாமதத்தோடு அவரைச் சந்திக்க அனுமதி கிடைத்து, நீட் தேர்விற்கு தமிழ்நாட்டிற்கு விலக்கு வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

ஆளுநரைச் சந்தித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் இச்சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டிருந்த நிலை யில் குடியரசு தின செய்தி வெளியிட்ட ஆளுநர் நீட் தேர்வு சாதாரண ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவுவதாகவும், இந்தி மொழியைத் தமிழக மாணவர்கள் புறக்கணிக்காது கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதன் பின் நான்கு மாதங்கள் கழித்து கிடப்பில் போடப்பட்ட அந்த மசோதாவை மீண்டும் சபாநாயகருக்கே திருப்பி அனுப்பி வைத்து தனது திருவிளையாடலை துவக்கி இருக்கிறார் ஆளுநர்.

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதா குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு உடனே அனுப்ப வேண்டும். அல்லது திருப்பு அனுப்ப வேண்டும். ஆனால் நிறுத்தி வைக்கக் கூடாது.அதுவும் பொதுப் பட்டியலில் உள்ள கல்வி குறித்தான சட்ட முன்வடிவுகளை ஏறத்தாழ நான்கு மாத காலம் நிறுத்தி வைத்த ஆளுநர் மீண்டும் அதை திருப்பி அனுப்பியிருப்பது அரசியல் சாசன சட்ட வரம்பு மீறல். அரசியல் சாசனத்தின் சரத்து 200 இது குறித்து தெளிவாக விளக்கியிருக்கிறது.

**ஆளுநர் என்பவர் ஒரு மாநில அரசின் அலங்காரத் தலைவர் என்றே உச்சநீதிமன் றம் தனது தீர்ப்பு வழியே பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளுக்கே அதிகாரம். நியமனங்களுக்கு இல்லை என்பதையும், தனது பல தீர்ப்புகளின் வழியே உச்சநீதிமன்றம் விளக்கியிருக்கிறது.**

ஆனாலும், தமிழக ஆளுநர் கடந்த காலனியாதிக்க கால கவர்னர் ஜெனரல் போல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகச் செயல்பட்டிருப்பது நாம் ஏற்றுக் கொண்ட மக்களாட்சி விழுமியங்களுக்கு எதிரானதாகும்.

இந்திய அரசாங்க சட்டம் 1935 வெள்ளையர்களால் கொண்டு வரப்பட்டபோது அதனை காந்தியடிகள், நேருவும் தீவிரமாக எதிர்த்தனர். ஆனால் பாஜகவின் முன்னோடியான இந்து மகாசபை இதனை வரவேற்றது.

சமஸ்தான அரசர்களின் உதவியோடு இந்து ராஜ்யம் அமைக்க இச்சட்டம் வழிவகுக்கும் என்று அதனை ஆதரித்து வரவேற்றனர். 1936ல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இந்த அரசாங்க சட்டத்தை பண்டித நேரு புதிய அடிமை முறைக்கான சாசனம் ! என்று வரையறுத்தார். அந்த வரலாறுதான் இப்போது தமிழக ஆளுநர் ஆர்.டி.ரவியின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கல்வி பொதுப்பட்டியலில் இருப்பது மட்டுமல்ல, பட்டியலில் (என்ட்ரி) 25 பல்கலைக் கழங்களை ஒழுங்குபடுத்துவது மாநிலங்கள் உரிமை என்று வரையறுக்கிறது. எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழத்தின் கீழ் அமைந்துள்ள தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும் ஒழுங்குபடுத்தவும் தனக்கான முறைமைகளை வகுக்கவும் மாநில அரசுக்கு முழு உரிமை உண்டு.

ஏன்? ஒன்றிய அரசு நடத்தும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் துவங்கப்பட மாநில அரசின் கல்வித்துறை தடையில்லா சான்று அளித்தாக வேண்டிய கட்டாயமிருக்கிறது. அத்தோடு அக்கல்விக் கூடங்களில் எழும் பிரச்சினைகளையும், ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் மாநில அரசுக்கு உரிமை உண்டு என்பதை இப்போதும் நாம் காண முடியும்.

அப்படி இருக்க நவீன தீட்டான நீட் தேர்வை ஒரு மாநிலம் தனது சொந்த நலனான சமூக நீதிக்கு எதிராக இருக்கிறது என்று கருதி வேண்டாம் என்று சொல்லும்போது, அதனை ஆளுநர் எப்படி மறுக்க முடியும்?

சமூக நீதி என்பது சமூகத்தின் ஒவ்வொரு மனிதனின் உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு சமமான மரியாதை கொடுத்து ஊக்குவிக்கும் ஒரு மதிப்பாகும். ஒட்டுமொத்தத்தில் சொல்லப்போனால் வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகங்களுக்கு வாய்ப்புகளைத் திறந்துவிடும் ஒரு வாய்ப்புச் சுதந்திரம்தான் சமூக நீதி. அதன் அடிப்படையே சமத்துவத்தை நோக்கிய, சுரண்டலுக்கு எதிரான, பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பு, இணக்கமான சக வாழ்வை உறுதி செய்வதே சமூக நீதியாகும்.

நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் கடந்த நூறு ஆண்டுகளாக சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு இடஒதுக்கீடு எனும் சமூக நீதி வழங்கப்பட்டு வருகிறது. அதன் விளைவாகத்தான் இன்று நாட்டின் மருத்துவ கட்டமைப்பில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

இடஒதுக்கீடு தகுதியையும், திறமையையும், நுண் திறன்களையும் மிக முன்னேறிய நாடுகளோடு போட்டியிடத்தக்க அளவுக்கு தமிழ்நாட்டு மாணவர்களை வளர்த்து எடுத்திருக்கிறது.

பொருளாதாரக் கொள்கையில் நிதி மூலதன ஆளுகையை வரவேற்கிற, உலகமய, தனியார் மயத்தை ஆதரிக்கும் பாஜக சமூக கொள்கைகளில் தொடர்ந்து சமூக நீதிக்கு எதிராக நிலை எடுப்பதும் சமூக நீதி அமல்படுத்தப்பட்ட இடங்களில் அதற்கு சமாதி கட்டி தனது உயர் சாதி ஆதிக்க நீதியை உட்செலுத்துவதற்கும் எப்போதும் எத்தனித்தே வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சிதான் தமிழ்நாட்டின் நீட் தேர்வு வேண்டாம் என்கிற முடிவுக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கக் காரணமாக இருக்கிறது.

நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவப் படிப்பில் தற்போதைய மாணவர் சேர்க்கையை எண்ணும்போது முதல் தலைமுறையைச் சார்ந்தவர்கள் கிராமப்புற ஏழை எளிய நடுத்தர மாணவர்களின் வாய்ப்பு பெரிதும் சூறையாடப்பட்டுள்ளதை நாம் அறிய முடியும்.

ஏறத்தாழ 80% மருத்துவ கல்வி வாய்ப்பைப் பெறும் மாணவர்கள் மூன்றாம் முறை தேர்வெழுதிய மாணவர்கள் என்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஆனால், நீட்தேர்வால் பல நன்மைகள் வந்துவிட்டதைப் போல பா.ஜ.க.வினரும் சங்க பரிவார கூட்டமும் கூக்குரலிடுகின்றனர்.

நீட் தேர்வால் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கட்டாய நன்கொடை ஒழிக்கப்பட்டு விட்டதாம். திறமையான மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறதாம். கல்வி நிலைய கருப்புப் பணத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டனராம். ஆனால் உண்மை என்ன?

தனியார் கல்லூரிகளில் ஆண்டுக்கு மருத்துவக் கல்விக்கான கட்டணம் ஒரு லட்சம் என்றிருந்தது தற்போது ரூ.20 லட்சமாக உயர்ந்து விட்டது. ஆண்டுதோறும் இந்தக் கட்டணத்தைத் தவணை முறையில் வசூலித்துவிடுகின்றன கல்வி நிறுவனங்கள். ஆக கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாகவே மாற்றிக் கொடுக்கிற ஒரு பெரிய உதவியைத்தான் இந்த நீட் மாணவர் சேர்க்கை நிகழ்த்தி வருகிறது.

திறமை, தகுதி என்பது பணத்தை வைத்து வருவதல்ல. மாறாக அம்மாணவரது கல்வி ஆர்வத்தை வைத்தே ஆகும். மாநில பாடத்திட்டத்தின்படி பயின்று வரும் மாணவர்களின் அந்த மதிப்பெண் முழுக்கத் துடைத்தெறிந்து விட்டு நீட் தேர்வு மதிப்பெண்ணை மட்டுமே அளவீடாகக் கொள்வது மாநில அரசின் கல்வி உரிமைக்கே எதிரானது.

மாநில பாடத்திட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை நீட் தேர்வுக்கு முன்பு அதிகம் இருந்தது. ஆனால் இன்று அது 3% மாக குறைந்து விட்டது.

தமிழ்நாட்டில் மொத்த மருத்துவ இடங்கள் 6,999. அதில் அரசுக் கல்லூரிகளில் 4,349 இடங்களும்,நிகர்நிலைப்பல்கலைகழகங்களில் 2,650 இடங்களும் உள்ளன. இதில் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்பது மாணவர்களிடம் நிகரின்றி கொள்ளையடிப்பதற்கான அமைப்பு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, ஏழை எளிய மாணவர்களுக்கு இதில் இடம் கிடைக்குமா? என்பதையும் இதற்கு ஆதரவாக முழங்குவோர்தான் விளக்க வேண்டும்.

தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களில் சி.பி.எஸ்.இ. மாணவர்கள் 8 பேர். மாநிலப் பாடத்திட்டத்தில் படித்தவர்கள் 2 பேர். முதல் 100 இடங்களில் சி.பி.எஸ்.இ. மாணவர்கள் 81 பேர். மாநில பாடத்திட்டத்தில் படித்தவர்கள் 17 பேர். முதல் 1000 இடங்களில் மாநில பாடத்திட்டத்தில் படித்த 394 மாணவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் மாநில அரசு கொண்டு வந்த அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீடாகும்.

நீட் தேர்வுக்கு முன்பு மாநில பாடத்திட்டத்தில் படித்த 98.2% மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர முடிந்தது. ஆனால் அது இன்று 59% குறைந்து விட்டது. நீட் தேர்வுக்கு முன்பு தமிழ்வழியில் பயின்ற 14.8% மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்தனர். ஆனால் இன்று அது 2% கீழே குறைந்து விட்டது.

வெறும் 1% இடம் பெற்ற சி.பி.எஸ்.இ. மாணவர்கள் இன்று அனைத்திலும் முழுக்க முழுக்க நிரம்பியுள்ளனர். நீட் தேர்வுக்காக தனியார் பயிற்சி வகுப்புகளுக்கு லட்சக்கணக்கில் கொட்டி அழும் வசதியான குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு வாரி வாரி வழங்கப்படுகின்ற சூழ்நிலையில் ஏழை மாணவர்களுக்கு எங்கே இடம்? எங்கே சமூக நீதி? சமநீதி?

நீட் தேர்வுக்கு ஆதரவாக முழங்குபவர்கள் கூறுகிறார்கள் சமூக நீதி நீட் தேர்வால் அதிகரித்திருக்கிறதாம் ! பொதுப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட 31% வெறும் 3.8%தான் முற்பட்ட சாதியினருக்கு கிடைத்ததாம் ! அதிலும் பெரும்பகுதியை இதர பிற்படுத்தப்பட்டவர்களும், தலித்துகளும் அடைந்து விட்டனராம்.

எனவே, நீட் வேண்டும் என்று முழங்குகிறார்களுக்கு நமது கேள்வி என்னவென்றால், நூறாண்டாக சமூக நீதி நிலைபெற்ற காரணத்தால் கிடைத்ததே இந்த வெற்றி. இது சமூக நீதிக்கான வெற்றி. இதுபோலவே பல ஆண்டுகளாக நீட்டிற்கு முன்பும் பொதுப்பிரிவில் இடஒதுக்கீட்டுப் பிரிவினர் வென்றதை காண முடியும் !

ஒன்றிய அரசின் எய்ம்ஸ் மருத்துவக் கல்வியில் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் 27%கூட பெறமுடியவில்லையே ஏன்? தலித்துகள் தங்களது எண்ணிக்கையை விட குறைவான இடங்களையே பெறுகிறார்களே ஏன்? அங்கெல்லாம் சமூக நீதியை நிலைநாட்ட ஒன்றிய அரசும், பா.ஜ.க.வும் எடுத்த நவடிக்கை என்ன?

ஐ.ஐ.டி.களில் இதே நிலை நீடிக்கிறதே ! சென்னை ஐஐடியில் பேராசிரியர் விபினோடுதான் சாதி ரீதியாக துன்புறுத்தப்படுவதாக தனது வேலையை ராஜினாமா செய்திருக்கிறாரே ! இது என்ன வகையான சமூக நீதி?

தமிழக ஆளுநர் தமிழ்நாட்டின் நிலைகளிலிருந்து முடிவெடுக்க வேண்டும். அறிவாலயம் சென்று முடிவெடுக்க வேண்டியதில்லை. ஆனால் கமலாலயம் சொல்வதற்கு கட்டுப்பட்டு அரசியல் செய்ய வேண்டுமா? சிந்திப்பது நல்லது. இல்லையெனில் சிந்திக்க வைப்பதை தமிழ்நாடு நிகழ்த்திக் காட்டும் ! நீங்கள் திருப்பி அனுப்பிய சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி உங்களுக்கு அனுப்பியுள்ளது. தமிழ்நாடு ஒன்றும் நாகாலாந்து அல்ல. நாகாலாந்திலேயே காய் நகர்த்த முடியாதவர் தமிழ்நாட்டில் முயன்றால் என்னவாகும். தீயோடு விளையாட வேண்டாம். ஏனென்றால் கைகளை தீய்த்து விடும். ஆளுநரே திரும்பிப் போ !

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

**மலர்** 84 **இதழ்** 45

# மாநில உரிமைகளைக் கேட்பது தேசத் துரோகமா?

கர்நாடகாவில், பள்ளி கல்லூரிகளுக்கு 3 நாள் விடுமுறை விடும் அளவுக்கு பிரச்சனை மோசமாக இருக்கிறது. இஸ்லாமிய மாணவிகள் கல்விக் கூடத்திற்கு வரும்போது ஹிஜாப் என்கிற தலையை மூடும் துணி அணியக்கூடாது, அது சீருடை விதிகளுக்கு எதிரானது என்று கூறுகிறார்கள்.

நெற்றியில் திருநீறு, நாமம், தாலி, சீக்கியர் தலைப்பாகை தாடி, பிராமணர் பூணூல் போன்றவையும் மதச் சின்னங்கள் தானே! அவற்றை சீருடை விதிகளை மீறியதாக கருத முடியுமா? ஹிஜாப் அணிவது மற்றவர்களுக்கு ஏதேனும் பாதிப்பை உருவாக்குகிறதா? யாரும் பதில் சொல்லப்போவதில்லை.

சீருடைக்கு எதிரானதென கல்வி நிலையங்கள் கூறவில்லை. பாஜக ஆளும் கர்நாடகாவில், ஆட்சி அதிகாரத்தால் ஆணவமேறிய இந்துத்துவா வெறியர்கள், தாமாகவே இதைச் சட்டம் ஆக்குகிறார்கள். பள்ளி கல்லூரி வளாகங்களுக்கு வெளியாட்களை கூட்டிவந்து, அவர்களுக்கு காவி துண்டுகளை அணிவித்து மாணவர்கள் போல் நடிக்கச் செய்கிறார்கள்.

கல்வி நிலையத்துக்குள் இஸ்லாமிய மாணவிகள் வரும்போது நுழைய விடாமல் தடுக்கிறார்கள். கும்பலாய் சூழ்ந்து 'ஜெய் ஸ்ரீராம்' எனக் கூவி கற்களை வீசுகிறார்கள். துன்புறும் இஸ்லாமிய பெண்களுக்கு பாதுகாப்பாக ஆசிரியர்களும் உடன் படிக்கும் சக இந்து மாணவர்களும் துணை நின்றாலும் இவர்களுடைய வன்முறை ஆட்டம் நிற்கவில்லை.

கல்லூரிக்குச் சென்ற மகளுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலையுடன், இஸ்லாமியர்கள் கல்லூரிக்கு வெளியே வந்து சேர்ந்தால், முஸ்லிம்கள் இந்துக்களைத் தாக்குகிறார்கள் என்று ஊடகங்களின் துணையோடு ஆர்ப்பரிக்கிறார்கள்.

இந்தியாவின் இசைக்குயில் மறைந்த லதா மங்கேஷ்கருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய போது, பிரபல இந்தி நடிகரான ஷாருக்கான் தமது மத வழக்கப்படி இறைவனிடம் கையேந்தி பிரார்த்தனை செய்ததை, எச்சில் துப்பி இழிவு செய்துவிட்டார் எனப் பெரும் கூச்சல் எழுப்பினார்கள்.

வேற்று மதத்தினரை காதலித்து திருமணம் செய்தால், 'லவ் ஜிகாத்' என்று சொல்லி 10 ஆண்டு சிறைத் தண்டனையும் ஒரு லட்ச ரூபாயும் அபராதமும் விதிக்க சட்டம் இயற்றுவதாக உத்தரப்பிரதேச தேர்தலில் பாஜக வாக்குறுதி தந்து இருக்கிறது.

தமிழ் நாட்டிலும் மதத்தால் மக்களை பிளவுபடுத்த கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநில அரசு இந்துக்களை வஞ்சிக்கிறது; கோவில்களை இடிக்கிறது என்று ஒரு கட்டளை மனுவை இந்து முன்னணி தாக்கல் செய்து, அது 8.2.2022ல் இரு நீதிபதிகள் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. பொது இடங்கள் நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களையும் அகற்ற வேண்டும் என்று சொன்ன நீதிமன்றம், இந்துக் கோயில்களை மட்டும் இடித்ததாக ஏதாவது ஒரு சான்று கொண்டு வருமாறு கூறி விசாரணையை ஒத்திவைத்து இருக்கிறது!

பிப்ரவரி 14ஆம் தேதி காதலர்கள் வெளியே வந்தால், திருமணம், முதலிரவு நடத்தி அதை வீடியோ எடுத்து வெளியிடுவோம் என்று பெருமிதமாக இந்து மக்கள் கட்சி அறிவிக்கிறது!

நாடாளுமன்றத்தில் ராகுல் காந்தி பேசிய போது, அரசியல் சட்டத்தின்படி இந்திய நாடு மாநிலங்களின் ஒன்றியம் தானே தவிர, தனி சாம்ராஜ்யம் அல்ல. இந்திய வரலாற்றில் ஒற்றை சாம்ராஜ்யம் ஒருநாளும் இருந்ததில்லை. அதைப் புறக்கணித்து, ஒரு தடியை எடுத்துக்கொண்டு, எல்லோரும் எனக்கு கட்டுப்படுங்கள் என உத்தரவிட்டால், அந்தத் தடி உடைக்கப்பட்டு தூள் தூளாக்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்" என்று பேசினார்.

பிரதமர் ஒரு நாலாந்தர அரசியல்வாதி போல "இந்திய பிரிவினை வாதத்தின் தலைவராக காங்கிரஸ் மாறிவிட்டது" என்று நாடாளுமன்றத்திலேயே பதிலளித்திருக்கிறார்.

"இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று சொல்வதிலிருந்து, காங்கிரஸ் தலைமையை நகர்ப்புற நக்சலைட்டுகள் கைப்பற்றி விட்டார்கள் என்று தெளிவாகிறது. காங்கிரசின் சிந்தனை முறை பேரழிவைத் தரக்கூடியது. உங்கள் கட்சிக்கு இந்திய தேசிய காங்கிரஸ் என்று ஏன் பெயர் வைத்திருக்கிறீர்கள்? காங்கிரஸ் கூட்டமைப்பு என மாற்றுங்கள்" என்று 8.2.2022ல் மோடி பேசியுள்ளார்.

ஐந்து மாநிலத் தேர்தல்கள் நெருங்க நெருங்க இது போன்ற தரம் தாழ்ந்த தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கும்.

நான் சொல்வதற்கு எதிராக எவர் பேசினாலும் அவர் தேசத்துரோகி என்பது ஹிட்லரின் குரல்.

மாநில உரிமைகள், மொழி, பொருளாதாரத் தேக்கம், வேலையின்மை, பெண்கள், தலித்துகள் மீதான கொடூர வன்முறைகள், அதிகரித்துவரும் வறுமை ஆகிய எதைப் பற்றிப் பேசினாலும் 'தேசத் துரோகி' பட்டம். மதத்தால் மக்களைப் பிளந்து, வாக்குகள் பெற்று தேர்தலில் ஜெயிப்பதே திட்டம்.

மதசார்பற்ற ஜனநாயக சக்திகள் இன்னும் வேகமாய் ஒன்றுபடுவதே தீர்வு!




## ஆடைகளைக் காரணம் காட்டி

# இஸ்லாமிய மாணவிகள் பள்ளிகள், கல்லூரிகளில் இருந்து வெளியேற்றம்

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் கடும் கண்டனம்

கர்நாடக மாநில ஹிஜாப் பிரச்சனை குறித்து இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆடைகள் சரியாக இல்லை என்ற அடிப்படையற்ற காரணங்களைக் கூறி கர்நாடக மாநில பள்ளிக்கூடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்து இஸ்லாமிய மாணவிகள் வெளியேற்றப்படுவதை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஹிஜாப் அணிந்துவரும் பெண்கள் கல்வி நிறுவன வளாகங்களுக்குள் நுழைவதைத் தடை செய்ய வேண்டும் என்ற காவி கும்பலின் மிரட்டலுக்கு நிர்வாகம் பணிந்து விட்டது. ஒவ்வொரு கல்லூரியாக பெண்களுக்கு கருத்துரிமை மற்றும் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்படுவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது ஆகும்.

கர்நாடகத்தில் தற்போது நடைபெற்று வருவது, ஆர்எஸ்எஸ் மற்றும் சங்கப் பரிவார அமைப்புகள்பால் விசுவாசம் கொண்டிருக்கும் வெறிபிடித்த வகுப்புவாத கும்பல்களின் நிலையான இயக்கமுறை ஆகும் என்பதை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

சிறுபான்மைச் சமூக மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்குள் நுழைவதைத் தடுப்பது, நிறுவனங்களை சேதப்படுத்துவது, தேர்வு காலம் நெருங்கும்போது பாடநூல்கள் உள்ளிட்டவற்றை எரிப்பது ஆகியவை வகுப்புவாத செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் வழக்கமான செயல்முறைகள் ஆகும்.

இதுபோன்றதொரு செயல்முறை சிறுபான்மைச் சமூகத்திற்கு எதிராக ஒடிசாவில் உள்ள கந்தமால் மற்றும் வேறு பல இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பொருளாதார ரீதியிலான பின்னடைவு மற்றும் சமூக கட்டமைப்பு ரீதியிலான வன்முறை போன்ற பல்வேறு காரணங்களால் பெண்கள் கல்வி கற்பது பாதிப்புக்கு உள்ளாகி வரும் காலத்தில், பெண்களை மேலும் அதிகாரம் இழக்கச் செய்திட, வகுப்புவாத சக்திகள் சூழலை மேலும் மோசமடையச் செய்து வருகின்றன.

பெண்களை அனைத்து வகையிலும் அதிகாரப்படுத்த வேண்டியது பற்றி மோடி அரசாங்கம் பேசி வரும் அதே வேளையில், கர்நாடக மாநில பாஜக அரசாங்கம் இஸ்லாமிய பெண்களை கல்வி கற்பதில் இருந்து வெளியேற்ற தலைகீழாக நிற்பது பெரும் முரண்பாடாக உள்ளது.

ஹிஜாப் மற்றும் காவித் தொப்பியை ஒரே நேர்க்கோட்டில் நிலைநிறுத்துவது தர்க்கரீதியாக தவறானது மட்டுமல்ல; வகுப்புவாத வெறுப்புணர்வு தீ பற்றி எரிந்திட திட்டமிட்டு உருவாக்கப்படுவதாகும். இது அழிவுகரமானதும் சிறுபான்மைச் சமூகத்தை அச்சுறுத்துவதற்கான முயற்சியும் ஆகும்.

ஹிந்துத்துவ தீவிரவாதிகளின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான கோரிக்கைகளுக்கு அரசாங்க அதிகா ரிகள் உடந்தையாக இருக்கின்றனர். அரசியலமைப்புச் சட்டம் வழங்கிவரும் உரிமைகளைப் பறிப்பதில் இவர்களும் இந்துத்துவ தீவிரவாதிகளின் கூட்டாளிகள் ஆவர்.

கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கும் அதிகாரிகள், இது போன்ற வகுப்புவாத மற்றும் பெண்களுக்கு எதி ரான வெறுப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவமானகரமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதது ஆகும்.

பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் காவி வன்முறையாளர்கள் விடுக்கும் அச்சுறுத்தல்களின் நேரடி விளைவாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின் விழுமியங்களையும், அடிப்படை உரிமைகளையும் உயர்த்திப் பிடிப்பதற்கு பதிலாக, இந்நிறுவனங்களின் நிர்வாகத்தார் பிராமணீய சக்திகளால் உருவாக்கப்பட்ட செயல்திட்டத்தில் விருப்பத்துடன் பங்கேற்பது வருத்தமளிப்பதாக உள்ளது.

பெண்கள் தங்களின் விருப்பப்படி ஆடைகளைத் தேர்வு செய்வதற்கான உரிமையை நிலைநிறுத்த தொடங்கியிருக்கும் இந்தச் சூழலில், இஸ்லாமிய பெண்கள் ஆடைகளைத் தேர்வு செய்வதில், கட்டாயப்படுத்தப்படுவதும், அதன் காரணமாக கல்வி மறுக்கப்படுவதும், மிரட்டப்படுவதும் வேதனை அளிக்கிறது. இது பெரும்பான்மைச் சமூகத்தவரின் அழகியல் சிந்தனையை, சிறுபான்மைச் சமூகத்தவர் மீது திணிக்கும் கலாச்சார கட்டளையின் வடிவமாகும்.

தண்டிக்கப்படுவோம் என்ற அச்ச உணர்வின்றி, அவரவர் விருப்பப்படி எந்த ஒரு மதத்தையும் பின்பற்றுவதற்கும், ஒழுகுவதற்குமான உரிமை குடிமக்கள் அனைவருக்கும் உண்டு. உடல் தோற்றத்தை மற்றும் ஆடைகளை தேர்வு செய்யும் உரிமையை முன்னிறுத்தி பெண்களைக் கண்டிப்பதும், தண்டிப்பதும் சமத்துவம் மற்றும் முன்னேற்றத்திற்கான பாதையைச் சீர்குலைக்கிறது.

ஹிஜாப் அணியும் பெண்கள் தலிபான்கள் அல்லர் என் பதை உணரவேண்டும். தலிபான்களைப் போல இந்துத்துவ அடிப்படைவாத சக்திகளும் பெண் கல்விக்கு எதிரானவர்களாக இருப்பது நகைப்புக்குரியது ஆகும்.

ஒரு பெண்ணின் உடல் தோற்றம் மற்றும் ஆடை அணிதல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கான உரிமை பாஜக – ஆர்எஸ்எஸ் அல்லது தலிபான் அல்லது எந்த ஒரு ஆணாதிக்க அமைப்பிற்கும் இல்லை என்பதை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மீண்டும் அழுத்தமாக வலியுறுத்த விழைகிறது. இது இந்நாட்டுப் பெண்களின் சமத்துவம் மற்றும் நீதிக்கான உரிமைகளைப் பறிப்பதற்கு ஒப்பாகும். நமது அரசியலமைப்புச் சட்டம் பாலின சமத்துவத்தை உத்தரவாதப்படுத்துகிறது. பெண்களுக்கு அரசியலமைப்பு சட்ட உரிமைகளை மறுப்பதும் ஒரு வன்முறை ஆகும்.

வன்முறையைத் தூண்டக்கூடிய அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம், பெண்களின் சுதந்திரத்தின் மீது தாக்குதல் தொடுப்பதோடு, பாகுபாடு கொண்ட, சமத்துவமற்ற, பெண்களுக்கு எதிரான வெறுப்புணர்வுமிக்க மற்றும் வகுப்புவாத தன்மையுடைய கல்விமுறையைப் பாஜக ஊக்கப்படுத்துகிறது.

தங்களின் கல்வி மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இஸ்லாமிய பெண்களுக்கு இந்திய மாதர் தேசிய சம்மேளனம் அதன் முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆடைகளைத் தங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுக்கும் பெண்களின் உரிமையை உறுதிப்படுத்திட அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

எவ்வித பாகுபாடுமின்றி வன்முறை வெறியாட்டங்களின் பாதிப்புகள் இன்றி இஸ்லாமிய பெண்கள் தங்கள் படிப்பைத் தொடர்ந்திட உகந்த சூழலை, தேச நலன் கருதி உருவாக்க வேண்டியது அரசியலமைப்புச் சட்டப்படியான கடமையாகும் என்று இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தேசிய தலைவர் அருணாராய், தேசிய பொதுச் செயலாளர் ஆனி ராஜா ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.



எஸ். தோதாத்ரி

தத்துவார்த்தம் 16

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 4



# சமுதாயத்தில் கருத்துக்களின் பங்கு

**கருத்துக்கள் அல்லது சிந்தனை வடிவங்கள் என்பனவற்றிற்கு அடிப்படை உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் என்பது மார்க்சியம். அதே சமயத்தில் இந்தக் கருத்துக்கள் அடிப்படை மீது செயல்புரியும் என்றும் மார்க்சியம் கூறுகிறது.**

கருத்துக்கள் தோன்றும் பொழுது பொருள் அடிப்படையில்தான் தோன்றும். ஒரு தச்சன் ஒரு மரத்தை அறுக்கிறான். அதனை நாற்காலியாகச் செய்கிறான். அவனது எண்ணங்கள் மரத்தைப் பற்றியதாக இருக் கும். ஆனால் கருத்துக்களுக்கு ஒரு தன்மை உண்டு. அதில் கற்பனைக்கு இடம் அதிகம்.

மரத்தை மரமாகத் தான் கருத முடியும். இதில் கற்பனைக்கு இடமில்லை. இது கருத்து உலகத்தில் இடம்பெறும் பொழுது கற்பனையான பல வடிவ மரங்களாகத் தோன்றலாம்.

சமுதாயத்தை விட்டு மனிதன் விலக விலக இது அதிகமாகும். இதன் காரணமாகத்தான் பல சமூகப் பிரச்சினைகளுக்கு பெரும்பாலோர் கருத்து உலகத்திலேயே தீர்வு காண்கின்றனர்.

உடல் நலன் சரியில்லை என்றால் மருத்துவரிடம் செல்ல வேண்டும். பலர் சோதிடரிடம் செல்கின்றனர். அவர் பரிகாரம் கூறுகிறார். இதனைச் செய்கின்றனர். இதனை தீர்வாக கருதுகின்றனர். இதற்கு கருத்துக்களின் சுதந்திரம் என்று பெயர்.

இதன் காரணமாகத்தான் கருத்து உலகம் அடிப்படைக்கு தொடர்பில்லாதது போன்று காட்சி தரும். இதனையே பெரும்பாலோர் உண்மை என்று நம்பி விடுகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் தோன்றி வளர்ந்த பின்னர் பல வகையாக செயல்புரியும். அவற்றில் முக்கியமானவை இரண்டு வகைப்படும். ஒன்று அடிப்படையில் மாற்றங்களை ஊக்குவிக்கும் கருத்துக்கள். இரண்டு முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள கருத்துக்கள்.

ஒரு உதாரணம் தரலாம், இந்தியாவின் விடுதலைப் போராட்டம் என்பது அடிப்படை சார்ந்த ஒன்றாகும். வெள்ளையர்கள் வரவால் இந்திய தொழில் முறையில் மாறுதல் ஏற்பட்டது. ரயிலும், நீராவி இயந்திரங்களும் முதலாளித்துவ முறையை இங்கு அறிமுகம் செய்தன.

இதன் காரணமாக இந்தியாவில் உள்ள பல நிலச்சுவான்தார்கள், சிறு நிலவுடைமையாளர்கள் இந்தத் துறையில் நுழைந்தனர். சிறுசிறு ஆலைகளைத் தொடங்கினர். இவர்கள் தேசிய முதலாளிகளாக உருவாகினர். ஆனால் இவர்கள் முயற்சியை வெள்ளையர்கள் ஆதரிக்கவில்லை.

பல வகைகளில் இவர்களது தொழில் முயற்சியை அவர்கள் தடுத்தனர். இதன் விளைவுதான் சுதந்திரம் என்ற கருத்து. இது தேச விடுதலைப் போராட்டமாக உருவெடுத்தது. இதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை உண்டு. இது அடிப்படை மாற்றத்திற்கு துணையாக இருந்தது.

மற்றொரு வகைக் கருத்து அடிப்படை மாறுதலை தாமதப் படுத்தும் கருத்து ஆகும். உதாரணமாக இந்திய நிலவுடைமை அமைப்பினை எடுத்துக் கொள்வோம்.

எல்லா வரலாற்று அறிஞர்களும், மார்க்சும், இது தேக்கநிலை சமுதாயம் என்று கூறியுள்ளனர். அப்படியானால் மாறுதல்கள் ஏற்பட வில்லையா? என்று கேட்கலாம். மாறுதல்கள் மிக மெதுவாக இடம்பெற்றன. இதற்குக் காரணம் மேலைய நாடுகள் போன்று இங்கு கருவிகள் முன்னேற்றம் ஏற்படவில்லை. சுய தேவை பூர்த்தியுடனே இந்த அமைப்பு நின்று விட்டது. இந்த அமைப்பினை நியாயப்படுத்த இங்கு பல சனாதன கருத்துக்கள் எழுந்தன. இவை இந்த அமைப்பை மேலும் மாறாமல் நிலைநிறுத்தின. மனுநீதி அத்தகைய ஒன்று. பக்தி மார்க்கம் என்ற கருத்தியல் மற்றொன்று.

**இந்த பக்திமார்க்கம் ஆண்டான் - அடிமை சமுதாயத்தை நியாயப்படுத்தியது. ஆண்டவனைத் தலைவராகவும், ஆண்டானாகவும் பக்தர்களை அடிமைகளாகவும் இது சித்தரித்தது. மார்க்கத்தில் சாதிய எதிர்க்குரல்களும், மனிதநேய கருத்துக்களும் இருந்தாலும், ஒட்டுமொத்த பக்தி மார்க்கம் ஆண்டான் - அடிமை என்ற உறவு நிலையையே வலியுறுத்தியது. இது பெருவாரியான மக்களிடம் பரவியதால், மாற்றம் என்பது மெதுவாகவே இடம் பெற்றது எனலாம்.**

கருத்துக்களின் மற்றொரு தன்மை, பழைய கருத்துக்கள் நம்மை விட்டு எளிதில் மறையாது என்பதாகும். ஒரு உதாரணம் தரலாம், ஒரு கொல்லன் பட்டறை வைத்து நடத்துகிறான், அதில் அவனே வேலை செய்கிறான், ஆனால் பல நெருக்கடிகள் காரணமாக அவன் பட்டறையை மூட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அவன் பக்கத்தில் உள்ள ஆலையில் வேலைக்குச் செல்கிறான். இப்பொழுது அவன் பாட்டாளி.

இந்த புதிய உணர்வைப் பெறுவதற்கு பதிலாக, அவன் பழைய தொழில் தொடர்பான சிந்தனையிலேயே இருக்கிறான், அவனது எண்ணங்கள் பழையது பட்டறை பற்றியதாகவே உள்ளன, அவை மறையவில்லை. சிறிது பணம் சேர்ந்ததும், அவன் பழைமையை பட்டறையைத் தொடங்கி ஒரு குட்டி முதலாளியாக மாறுகிறான். புதுமை நோக்கிச் சென்றாலும் பழைய எண்ணங்கள் அவனை விட்டு மறையவில்லை.

இது சமுதாயம் முழுவதற்கும் பொருந்தும். சமுதாயத்தில் பழைய கருத்துக்கள், அவை தோன்றிய அடிப்படை மறைந்தாலும் தொடர்ந்து பல வடிவங்களில் இடம் பெறும்.

இதன் காரணமாகத்தான் காலங்காலமாக கருத்தியல் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இன்னும் அது இடம்பெறுகிறது. எல்லா வர்க்க சமுதாயங்களிலும் ஆளும் வர்க்கத்தின் கருத்துக்களே வலுவாக இடம் பெறும். இதனை கிராம்சி எடுத்துக்காட்டியுள்ளார்.

இதற்கு எதிராக முற்போக்கு சக்திகள் கருத்தியல் போராட்டங்களில் ஈடுபடுகின்றன. முற்போக்கு சக்தியான பாட்டாளி வர்க்கம் சோவியத் யூனியனில் வெற்றிபெற்ற பின்னர் மார்க்சியம் உலகமெங்கிலும் விரைவாக பரவியது. இதற்கு காரணம் சோவியத் அரசு ஆகும்.

இவ்வாறு போராடும்பொழுது ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அடிப்படையை புறக்கணித்துவிட்டு வெறும் கருத்துப் போராட்டத்தில் ஈடுபடும் போது அது அராஜகவாதமாக இருக்கும் என்று லெனின் கூறுகிறார்.

இதனையும் மனதில் கொள்ள வேண்டும். இவ்வாறு பண்பாட்டு போராட்டம் நடத்தும் பொழுது வெறும் அடையாளங்களைப் பின்பற்றினால் அது தத்துவக் குழப்பத்தில் முடிவடையும்.

தொடர்புக்கு: **98947 83657**

## திருச்சி மாவட்டத்தில் வேட்புமனுக்கள் தாக்கல்

மணப்பாறை நகராட்சியில் 19 வது வார்டுக்கு திமுக தலைமையில் உள்ள மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் த.தங்கமணி வேட்பு மனு தாக்கல் செய்தார். 20 வது வார்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் த.மனோன்மணி வேட்பு மனு தாக்கல் செய்தார்

வேட்புமனு தாக்கலின் போது, புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், வார்டு செயலாளர் ராகுல் ஆகியோர் உடனிருந்தனர்.

**உப்பிலியபுரம் பேரூராட்சி:** உப்பிலியபுரம் ஒன்றியம் பலாகிருஷ்ணபட்டி பி.மேட்டுர் பேரூராட்சியில் 8 வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கமலம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், திமுக வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், நகரச் செயலாளர் வெள்ளையன், சி.பி.ஐ. நகரச் செயலாளர் ஆண்டி ஆகியோர் வேட்புமனு தாக்கலின் போது கலந்து கொண்டனர்.

**முசிறி நகராட்சி:** முசிறி நகராட்சியில் 8வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வி.பி.சண்முகம் வேட்பு மனு தாக்கல் செய்தார். புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிசாமி வேட்புமனு தாக்கலின்போது கலந்து கொண்டார்.

**துவாகுடி நகராட்சி 01:** துவாக்குடி நகராட்சியில் 10 வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்யின் சார்பில் கே. பழனிசாமி வேட்பு மனு தாக்கல் செய்தார்.

**துவாகுடி நகராட்சி 02:** தூவாக்குடி நகராட்சியில் 13 வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்



ஜி.ஆர்.பிரகாஷ் வேட்பு மனு தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கலின்போது புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் செல்வராஜ் கலந்து கொண்டார்.

**கூத்தப்பர் பேரூராட்சி:** திருவெறும்பூர் ஒன்றியம் கூத்தப்பர் பேரூராட்சியில் 18 வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜெ.வைசூர்யா வேட்பு மனு தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கலின்போது புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் செல்வராஜ் கலந்து கொண்டார்.

**லால்குடி நகராட்சி:** லால்குடி நகராட்சியில் 22 வது வார்டியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குணசேகரன் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கலின்போது சி.பி.ஐ. பசுபதி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## தஞ்சையில் செயல் வீரர்கள் கூட்டம்

ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் தஞ்சை மாநகரில் 15வது வார்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் கே. கல்யாணி போட்டியிடுகிறார். தேர்தல் பணிக்குழு சார்பாக 15 ஆவது வார்டு செயல்வீரர் கூட்டம் தஞ்சாவூர் கீழராஜவீதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக கூட்ட அரங்கில் திராவிட முன்னேற்றக் கழக வார்டு செயலாளர் எஸ். ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி நீலமேகம் வெற்றி பெறவேண்டிய அவசியம் குறித்து பேசினார். திமுக மாவட்ட பிரதிநிதி பி.கண்ணன், 15வார்டு அவைத்தலைவர் மற்றும் முன்னாள் மாநகர துணை செயலாளர் வி.மோகன் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் ஆர். பி. முத்துக்குமரன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.சந்திரகுமார், கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி.கிருஷ்ணன், மாவட்ட குழு உறுப்பினர் வெ.சேவையா, டி.கஸ்தூரி, டி.என்.எஸ் பாபு, தொழிற்சங்க தலைவர்கள் துரை.மதிவாணன், கே.சுந்தரபாண்டியன், பி.செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கலை இலக்கியப் பெருமன்ற ஒரத்தநாடு கிளை தொடக்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஒரத்தநாடு கிளை தொடக்கவிழா பிப். 5 அன்று கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. தஞ்சை மாவட்டச் செயலர் அய்யாறு புகழேந்தி, கவிஞர் வல்லம் தாஜுபால், பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு மன்றப்பணிகள், செயல்கள் குறித்து உரை நிகழ்த்தினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, துணைச் செயலாளர் கல்யாணசுந்தரம், ஒன்றியச் செயலாளர் சீனி முருகையன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சக்திவேல் மற்றும் பலர் வாழ்த்திப் பேசினர். நாட்டுப்புறப்பாடல்களுடன் சிறப்பான நிகழ்வு நிறைவுபெற்றது.

கிளையின் தலைவராக சிவஞானம், செயலாளராக ஆனந்தன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிகழ்ச்சியை ஆசிரியர் இராமலிங்கம், பாலச்சந்திரன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.



ராமானுஜம்



# அப்பாவி மக்களின் ஆன்மீக நம்பிக்கை அபகரித்த சாமியார்கள்

**அப்பாவி ஜனங்களின் ஆன்மீக நம்பிக்கையின் மீது தேரோட்டிக் கோடி கோடியாய்ச் சுருட்டி விட்டு இன்று காவி உடை நீக்கிக் கைதி எண் பொறித்த சட்டையுடன் வெவ்வேறு சிறைகளில் வாழ்ந்து வருகிற சாமியார்கள் அதிகாரப் பூர்வ உண்மைகள் சிலவற்றை இங்கு காண்போம்: இப்போதிருக்கும் ஒன்றிய பி ஜேபி அரசும் அதன் ஊதுகுழல் ஊடகங்களும், மக்களின் கண்மூடித்தனமான நம்பிக்கையுமே இவர்களின் சதிராட்டத்திற்கு அரண் என்பதைப் புரிய வேண்டும்.**

**பாபு ஆசாராம்:** இந்தப் பெயர் ஹரியானா மானிலத்தையும், சாமியார்களின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த இந்தியாவின் பெரும் பகுதியான அப்பாவி பக்தர்களையும் உலுக்கிய பெயர். பல லட்சம் அப்பாவி ஜனங்களை நம்பவைத்து கோடி கோடி சம்பாதித்தவர். உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருத்தியைப் பாலியல் வன்முறை செய்த குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு சாகும் வரை சிறை தண்டனை பெற்றுள்ளார். அந்தக் கேவலம் நடந்த இடம் அவரின் ஆசிரமம். அதுவும் நடந்த நாள் சுதந்திரதினமான ஆகஸ்ட் 15

**கூடுதல் தகவல் :** ஆசாராமின் மகன் நாராயணன் ப்ரேம்சாயட என்பவரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தண்டனையின் காரணம் : சூரத் (குஜராத்) ஆசிரமத்தில் 2 பெண்களைப் பாலியல் வன்முறை செய்ததாக நிரூபணம் ஆனது. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பது கடைப் பிடிக்கப் பட்டதாக இருக்கலாம்.

**குர்மீட் ராம் ரஹீம் சிங் :** 'டேரா சதா' என்ற தனியான ஒரு ஆன்மீக இயக்கத்தைத் துவக்கிப், பல லட்சம் ??பக்தர்களைப் பல கோடி சொத்து, பணம் கொண்டவராய் வலம் வந்தார். பஞ் சாப், ஹரியானாவில் அவரின் கொடி பறந்து கொண்டிருந்தது. இப்போது அவர் தெய்வீகம் சிறையில் உலவுகிறது/ ... பன்ச்குலா/ மத்தியப் புலனாய்வுப் பிரிவு விசாரித்து, வழக்கும் தொடுத்து பின்னர் நிருபிக்கப் பட்டதில், தொடர்ந்து அவர் செய்த பாலியல் வன்முறைக் குற்றங்கள்..அவரைச் சிறையில் தள்ளின. அவரைக் கைது செய்ததை எதிர்த்து அவரது ஆன்மீக பக்த கோடிகள் வன்முறையில் ஈடுபட்டு, பல கோடி பொதுச் சொத்தும் 40 + உயிர்களும் இரையாயின.

**ஸ்ரீ ராம்பால் :** ஹரியானாவைச் சேர்ந்த இந்த மனிதர் திடீரெனப் பல லட்சம் பக்தர்களைப் பெற்று அருள் பாலித்துக் கொண்டிருந்தார். அவர் மீது நிரூபிக்கப் பட்ட குற்றங்கள் கொலை, தேச துரோகச் செயல்கள், 42 முறை கிட்டத்தட்ட 5 வருடம் அவருக்கு வந்த சம்மன்களை ஏற்க மறுத்திருக்கிறார். அவர் கைதாகப் போகிறார் எனத் தெரிந்ததும் அவரின் ஆட்கள் வன்முறையில் இறங்கினர். ஹரியானாவிலுள்ள ஸிர்சா என்ற இடத்தில் போக்குவரத்தை முடக்கினர். அவரின் ஆசிரமச் சுவரை எந்திர வண்டியின் மூலம் உடைத்து உள்ளே சென்று அவரைக் கைது செய்திருக்கிறார்கள். 2ஆவது மாடியில் அவரைக் கைது செய்து அழைத்துச் சென்ற போது, கூடுதலாகக் காவல் துறையினரின் நேரடிப் பார்வையில் பட்டன: 18 மாதங்களே ஆன ஒரு குழந்தையின் உடலும், 5 இளம் பெண்களின் 5 உடல்களும். ஒருவேளை ஏதும் பக்திப் பரவசத்தில் ஏதோ நிகழ்ந்திருக்கலாம். நாம் தெய்வ நிந்தனை புரிதல் வேண்டாம்!

இச்சாதாரி ப்ரம்மானந்த்: நல்ல பெயர்; இச்சா என்றால், ஹிந்தியில் ஆசை என்பதாகும். 2010 வரை டில்லியில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் காவலாளியாக வேலை பார்த்தவர். பலரும் இவரின் ஆன்மிக வலையில் சிக்கினர். இவரின் விசாலப் பார்வை ஆண், பெண் இரு பாலாரையும் வலைக்குள் இழுத்தன. இப்போது இவர் இருப்பது சிறைக் கூடம். நிரூபணம் ஆன குற்றச் செயல் உயர் மட்ட அளவிலான பாலியல் ஏற்பாடுகள், வசப்படுத்தல். இச்சாதாரிகளை ப்ரம்மானந்தம் அடையவைத்த சாமி இன்று சிறையில் சித்த யோகம்.

**ஸ்ரீ நித்யானந்தா பரமஹம்சா:** இந்த மாதிரிக் குற்றங்களில் எக்கு முந்துகிறது என்ற பழி தீர்க்கவோ என்னவோ, இந்தத் திருவண்ணாமலை இளைஞன், இந்தியச் சந்தையில், நம்பிக்கை தோய்ந்த பக்திக்கு நல்ல சந்தை உள்ளதை உணர்ந்து பெங்களூர் எல்லையின் ஓரத்திற்கே ஓடினான், பிடதி என்கிற இடத்தில், கேள்விகளுக்கே இடமின்றி நம்பிக்கைகளை மட்டுமே அனுமதிக்கும் ஒரு "ஆன்மீகக் கோட்டையை நிறுவினான். காற்று உள்ளே போகவும் கடுமையான நிபந்தனைகள். இப்போது அவர், தலை காட்ட முடியாத நிலையில் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். பல குற்றப் பிரிவுகளில் ஒரு தலை மறைவு வாழ்க்கை உலக விஞ்ஞானமே காண இயலாத இடம் என நம்ப வைக்கப் பட்ட கைலாய நாட்டில் வாழ்கிறான். ஓரினச் சேர்க்கை, பொய், பித்தலாட்டம், பாலியல் வன்முறை, கொலைக் குற்றம் என சகலமும் சேர்ந்த தேடப்படும் குற்றவாளி இந்தச் சாமி..

அவன் மீது வழக்குகள், கொலை முயற்சி, தகா உறவு, பாலியல் வன்கொடுமைகள், கட்டாயச் சிறை வைத்தல் எனப் பட்டியல் நீள்கிறது. உண்மையிலேயே அவன் சர்வ வலிமை மிக்கவனோ என எண்ண வேண்டியுள்ளது.

**பிரேமானந்தா ஸ்வாமிகள்:** திருச்சியில் ஆசிரமம் அமைத்துப் பல்லாயிரம் பேரை நம்ப வைத்து அவதார புருஷனாகக் காட்சி அளித்த செக்ஸ் சாமியார் 13 பெண்களைக் கற்பழித்த குற்றம் நிரூபிக்கப் பட்டு 1997ல் சிறையில் அடைக்கப்பட்டார். இரட்டை ஆயுள் தண்டனை பெற்ற இவரின் தண்டனையை உயர் நீதி மன்றம், உச்சநீதி மன்றம் இரண்டுமே நீக்க மறுத்தன. கடைசித் தகவல் கடலூர் சிறையிலிருந்து புழல் சிறைக்கு மனிதர்கள் தரும் சிகிச்சைக்காக மாற்றப் பட்டுள்ளார்.

**ஸ்வாமி சடாச்சாரி :** "பிக் பாஸ்" நிகழ்ச்சி மூலம் வட இந்தியாவில் நன்றாக அறிமுகம் பெற்று, பின் பல வருடம் திடீர் சாமியாராகி இறுதியில் டில்லி உயர் நீதி மன்றம்,முழு விசாரணைக்குப் பின்னர் அவருக்குச் சிறை தண்டனை ஜனவரி 2018ல் வழங்கியது. அவர் மீதான, நிரூபணமான குற்றப் பிரிவுகள்: கொள்ளை, பாலியல் வக்கிரப் பதிவுகள், தனக்கு வேண்டியவற்றைப் பெற அச்சுறுத்தல் இவை போன்றவை. இத்தனையும் போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா

**விஜய குமார் என்கிற கல்கி அவதாரக் கடவுள்:** விஷ்ணு பகவானின் கடைசி அவதாரம் எனத் தன்னைச் சொல்லிக் கொண்டு தமிழ் நாட்டில் காலூன்ற நினைத்த பகவான் இடப் பெயர்ச்சி செய்து கொண்டு ஆந்திராவில், ஒரு "ஆன்மிகக் குடிசையை அமைத்து மக்களுக்குக் கருணை, அருள், நல் வாக்கு இவற்றை மொத்தமாகவும், சில்லரையாகவும் வினியோகம் செய்து கொண்டிருந்தார். முன்னாள் எல்.ஐ.சி ஊழியரான இவர் 40 கிளைகள், ஒரு பல்கலைக் கழகம், வெளி நாடுகளில் சொத்து என அருள் வியாபாரம் விரிவடைவதைப் பார்த்து அசந்து போன அரசு, அருள் வாக்கு வியாபாரம் குறித்து குடைந்து பார்த்ததில், விஜயகுமார் என்கிற ஸ்ரீலஸ்ரீ கல்கி தன் குடும்பத்தோடு சுமார் 500 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு, மற்றும் சில பொருளாதார மோசடி வழக்குகளுக்காக எண்ணி வருகிறார்.

**குரு சிவசங்கர் பாபா :** பாபா என்றாலே இரண்டாம் நிலைக் கடவுளாய் பக்த கோடிகளால் கருதப் படும் சாமியார்களில் ஒருவர்தான் இந்த என். சிவசங்கரன் என்னும் சிவசங்கர் பாபா. போக்குவரத்து குறித்த தொழில் நுட்பம், வாகனங்கள் விற்பனை இவற்றில் மேல்நிலை அடைந்த சிவசங்கரன், கல்வியும் ஒரு சிறந்த வியாபாரச் சரக்காய் மாறி வரும் சூழலில், பாபாஜி சென்னை கேளம்பாக்கத்தில் ஒரு பள்ளியை நிறுவினார். இவர் மீது பள்ளி மாணவிகளிடம் பாலியல் துன்புறுத்தல் குற்றப் பிரிவில், வழக்குப் பதிவுகள். இப்போது ஜாமின் மறுக்கப் பட்ட நிலையில் காமப் பசி தீர சிறையிலிருந்து கொண்டு களி உண்டு வருகிறார்.

• இந்திய ஜனத்தொகையின் விகிதாச்சாரப் படியே மாதாகோவில் மதகுருமார்களிலும் பாலியல் களி நடனம் புரிந்து களி சாப்பிட சிறை சென்றுள்ளவர்கள் இருக்கவே செய்கிறார்கள். கூகுளில் தேடினால் மேலை நாடுகளில் மத குருமார்கள், போதகர்கள் செய்த பாலியல் குற்றங்கள் குறித்து அதிர வைக்கும் தகவல்கள் கிடைக்கின்றன.

மிகப் பல. ஊடகங்களில் வெளிவந்து அதிகம் பேசப்பட்ட ஒன்றிரண்டு நம்மூர்ச் செய்திகள் சிலவற்றைப் பார்ப்போம்:

**ஃப்ரான்கோ முல்லக்கல் :** ஆசிரமத்து ஆன்மீக லீலைகளில் நாங்கள் வேற்று மதத்து சாமியார்களுக்கு ஒன்றும் இளைத்தவரா, சளைத்தவரா எனக் கேள்வி கேட்டு, காம லீலை புரிந்தவர் இவர்.. மதப் பணி புரிய வந்த இளம் கன்னியாஸ்த்ரீயைப் பாலியல் வன்கொடுமை புரிந்த குற்றத்திற்காகப் பாதிரியார் முல்லக்கல் சிறைத் தண்டனை பெற்றுள்ளார். பஞ்சாபிலும், கேரள மானிலத்திலும் இந்தப் பாதிரியை மதப் பணியினின்று நீக்கக் கோரி கிறித்தவ மக்கள் பலரும், கிறித்தவ சேவைப் பணியில் இருப்பவர் பலரும் வீதியில் இறங்கிப் போராடிய நிகழ்வு சென்ற இரு வருடத்தில்தான் நடந்தது. இதை நேரில் பார்த்த, சாட்சியம் அளித்த பாதிரியார் குரியகோஸ் சில நாளிலேயே குற்றம் பற்றிய அனைத்துத் தகவல்களையும், போராடிய கன்னியாஸ்த்ரிகள் வாடிகன் நகரிலுள்ள, உலகக் கிறித்தவ மதத் தலைவர் போப்புக்கும் அனுப்பினர். இங்குள்ள கிறித்தவ மத அமைப்பின் தலைவர்கள் இது போன்ற செய்திகளைப் பொது அரங்கில் கொண்டு போனதற்காக பாதிக்கப் பட்டவர்களையே சாடினர். தேவ கிருபை இருந்தும் ஃபாதர் ஃப்ராங்கோ சிறையில் வாடுகிறார்.

**ஃபிகரெஸ் மற்றும் ராஜ கொக்கன் பாதிரிமார்கள் கேரள மாநிலம் :** பின்னவர், தள்ளிக்காட்டுசெரி (திரிசூர்) பகுதியில், கொடுமை9 வயது சிறுமியை ஏமாற்றிப் பாலுறவு கொண்டு, அக்குசுறித்தி விட்டுப் பின் ஓடி, நாகர்கோவிலில் போய் ஒளிந்திருக்கிறார். பாலியல் குற்றங்களுக்காக மக்களால் கடுமையாகச் சாடப் பட்டு மத நிர்வாகமும் முடிவு செய்து வேறு வழியின்றி சிறை சென்றார். முன்னவர், கடைசிவரை கிறித்தவ மத அமைப்பின் மேல் நிலையினரால் காப்பாற்றப் பட்ட நிலையில், அவரின் பாலியல் குற்றங்கள் நிரூபிக்கப் பட்டு, போக்சோ சட்டத்தின் கீழ் கைதாகி இருக்கிறார்.

**ஃபாதர் வர்கீஸ். மலப்புரம்:** ஆர்தோடாக்ஸ் ஸிரியன் பிரிவைச் சேர்ந்த சாமியார் ஃபாதர் வர்கீஸ் பாலியல் குற்றங் களுக்காக தண்டனை பெற்றுள்ளார். நட்சத்திர அந்தஸ்து கொண்ட சாமியார்களில் சிலர் பற்றி மட்டும் இங்கே தரப்பட்ட தகவல்களை வைத்து இவை முழுமையான பட்டியல் என்ற பெரும் பிழையான முடிவெடுக்க வேண்டாம்.

போலிச் சாமியார்களால் மோசமாக ஏமாற்றப் படும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும்,ஒரு விஞ்ஞானப் போக்கைக் காட்டவும், பல சிந்தனையாளர்கள் முயன்றிருக்கிறார்கள். உலகை உருண்டை வடிவமானது எனச் சொன்ன கலிலியோ கூட கேவலப் படுத்தப்பட்டார்.

அது போல மூட நம்பிக்கைகளையும், போலிச் சாமியார் களையும், வெறி பிடித்த மத அடிப்படைவாதிகளையும், மூடச் சடங்குகளையும் தொடர்ந்து தோலுரித்துக் காட்டியவர்களைத் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாக்கிய சமூகத்தில்தான் நாம் வாழ்ந்து வருகிறோம்.

**போன பத்து ஆண்டுகளில் மூட நம்பிக்கை எதிர்ப்பு, ஆர் எஸ் எஸ்ஸின், சங்க் பரிவார் கூட்டத்தின் பிற்போக்குத் தனத்தை எதிர்த்துப் பேசிய, எழுதிய, இயக்கம் கண்ட பன்சாரே, தபோல்கர், கல்புர்கி, கௌரி லங்கேஷ் என இந்தப் பட்டியலில் குறிப்பிடப் பட்டவர்களெல்லாம் ஒரு பத்தாண்டுகளுக்குள்ளேதான் எல்லோருமே ஒரே மாதிரித் துப்பாக்கித் தோட்டாக்களால் மாய்க்கப் பட்டுள்ளனர்.**

ஒரு கேள்விதான் இதன்படி ஆழமாய்க் கேட்கத் தோன்றுகிறது. போலிச் சாமியார்கள், போலிச் சடங்குகளுக்கு அப்பாவி மக்கள் இரையாதலும், அவற்றை அவர்களை அடையாளம் காட்டி நிற்பவர்கள் வரிசையாய்த் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாதலும், மக்கள் விரோதிகளின் சமூக விரோதிகளின் கூடாரத்தினின்று ஏவப்பட்ட பணிகள்தனே?

மக்கள் மத்தியில் சுரண்டலுக்கெதிரான கருத்தை வீதி நாடகத்தின் மூலம் விளக்கிய சப்தார் ஹஷ்மி கொடூரமாகக் கொலை செய்யப் பட்டதையும், இந்திய நாட்டின் பிரிவினை மத வெறியர்களுக்குத்தான் துணை போகும் என்பதை வற்புறுத்திய காந்திஜி இந்து மத வெறி தூண்டப் பட்ட கோட்சேயின் தோட்டாக்களுக்குப் பலியானதையும், இவற்றோடு இணைத்துப் பார்த்தால் சரியன விடை கிடைக்கும். அந்த விடை கொண்டு, சமூக எதிரிகளை இனம் காணுதலும், அவர்களை எதிர்த்துப் போராடுவதும் நமது தொடர் பணியாகவே அமையும்.

அந்த விடையை சமூகத் திரள் முழுதும் கொண்டு செல்வது சமூக நேயத்தின் தலையாய அம்சமே. இணைந்து நாமதை மேற்கொள்வோம்!!

தொடர்புக்கு : 94498 26636



# சங்கே முழங்கு!

## ஆளுநரே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு

### இளைஞர் பெருமன்றம் மற்றும் மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்




நீட்தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என தமிழ்நாடு மக்களும் அரசியல் இயக்கங்களும் இளைஞர், மாணவர் அமைப்புகளும் தொடர்ந்து போராடி வருகின்றனர். தமிழ்நாடு அரசும் சட்டமன்றத்தில் நீட்தேர்விலிருந்து விலக்கு கேட்டு ஒருமனதாக மசோதா தாக்கல் செய்து ஆளுநரிடம் கொடுத்தது.


மசோதாவை பெற்றுக்கொண்ட ஆளுநர் குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்புவதற்கு பதிலாக, தமிழ்நாடு அரசுக்கே மசோதாவை திருப்பி அனுப்பி தமிழ்நாடு அரசையும் தமிழ் மக்களையும் அவமானப்படுத்தியுள்ளார்.

இதனைக்கண்டித்து நீட்தேர்வு விலக்கு மசோவை திருப்பி அனுப்பிய ஆளுநரே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு !

ஒன்றிய அரசே நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களித்திடு, கல்வியை மாநிலப்பட்டியலில் இணைத்திடு என்ற முழக்கங்களோடு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்டத்தலைவர் கே.பி.வி.ராஜேஸ் தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் க.பாரதி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

வடசென்னை வியாசார்பாடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் கோட்டி. சுரேஷ் தலைமை தாங்கினார். மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன், மாணவர்பெருமன்ற மாவட்ட தலைவர் அன்பு ஆகியோர் கண்டனவுரையாற்றினர். மயிலாடுதுறையில் மாவட்ட செயலாளர் எம்.பிரபாகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாவட்டசெயலாளர் மு.க.பகத்சிங் கண்டனவுரையாற்றினார். நெல்லையில் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.ஏ.பி.பாலன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டதுணைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநிலத்துணைத்தலைவர் கு.ராஜேந்திரன் கண்டனவுரையாற்றினார். தூத்துக்குடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பெ.சந்தனசேகர் தலைமை தாங்கினார். முன்னாள் மாநிலசெயலாளர் வ.பாலமுருகன் கண்டனவுரையாற்றினார். ராணிப்பேட்டை சோளிங்கரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் திற்கு ஒன்றிய செயலாளர் ஆ.பிரசாந்த் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்றம் இளையராஜா கண்டனவுரையாற்றினார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கே.எஸ்.லெனின் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் ப்ராங்கின் கண்டனவுரையாற்றினார். இளைஞர் பெருமன்றம் மற்றும் மாணவர் பெருமன்றம் சார்பில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றது.




## கே.கே.சாமிநாதனின் நான்காம் ஆண்டு நினைவு நாள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலக்குழு உறுப்பினரும், மாவட்ட செயற்குழு உறுப்பினருமான கே.கே. சாமிநாதன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயமணி தலைமை தாங்கினார்.

சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்ட பொருளாளர் கே.ராஜாங்கம், நத்தம் ஆர்.வினோத்குமார் மற்றும் கே.கே.சாமிநாதன் மகன் எஸ்.சதீஷ்குமார், துணைவியார் பி.குமாரி ஆகியோர் கலந்துகொண்டு தோழருக்கு புகழ் அஞ்சலி செலுத்தினர்.



லி. உதயகுமார்



# இசைத்துறையின் பிதாமகள்

**1946ஆம் ஆண்டு கர்தார் ஸ்டூடியோவில் ஒரு பாடலுக்கு இசை அமைப்பதற்கான ஏற்பாட்டில் மும்முரமாக இருக்கிறார் பிரபல இசையமைப்பாளர் நவுஷாத் அலி. அப்பொழுது ஒரு இளம் பெண் தனது மெல்லியக் குரலில் ஒரு பாடலைப் பாடியபடி அவரை கடந்து செல்கிறாள். அந்தக் குரல் அவரை மிகவும் நெகிழச் செய்தது. அப்பொழுது அவரது எண்ணத்தில் இந்தப் பெண்ணிற்கு வாய்ப்பளித்தால் இசை சிகரத்தைத் தொடுவாள் என்று முடிவு செய்தார்.**

பிறகு அந்தப் பெண்ணை பற்றிவிசாரிக்கிறார். அப்பெண் கோரஸ் பாடுபவள் அதாவது கோஸ்டி கானம் என்று இசைத்துறையில் சொல்வார்கள். அந்தப் பெண்ணிற்கு இசையமைப்பாளர் நவுஷாத் அலி ஒரு கஜல் பாடல் பாட வாய்ப்பு அளிக்க விரும்புவதாக கூறுகிறார். ஸ்டுடியோவில் உள்ள அனைவரும் அதிர்ச்சி அடைகிறார்கள். காரணம், அன்றைக்கு கஜல் பாடல் பாடுவதற்கு முன்னணி பாடகர்கள், நடிகர்கள் என நூர்ஜகான், சுரய்யா, ஷம்சத்பேகம், ராஜ்குமாரி , கேஜர்பாய் ஆகியோர் புகழின் உச்சியில் இருந்தவர்கள். இவர்களையெல்லாம் விட்டு விட்டு இப்பெண்ணுக்கா வாய்ப்பு வழங்குவது அது கூடாது. அப்பெண் கஜல் பாட மாட்டாள். இந்த முயற்சி தோல்வியைத் தரும் என்று எடுத்துரைக்கிறார்கள்.

ஆனால் இவர்களின் கருத்தையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் அப்பெண்ணை அழைத்து வரச் சொல்கிறார். உன்னை ஒரு படத்தில் பாடல் பாடுவதற்கு அழைத்திருக்கிறேன். சாந்தினி ராத் என்ற இந்திப் படம் அது. பின்னர் அந்தப் படத்தில் அந்தப் பாடலை பாடச் சொல்லி பதிவு செய்கிறார். முதல் பதிவில் அவருக்கு திருப்திகரமாக இல்லை. அம்மா உனது குரல் மெல்லியக் குரலாக இருக்கிறது. கொஞ்சம் உரத்தக் குரலில் பாட வேண்டும் என்று சொல்கிறார். அதன் பின்னர் அந்தப் பாடல் பதிவு செய்யப்பட்டப்பிறகு திருப்திகரமாக அமைந்ததில் இவருக்கும், தயாரிப்பாளருக்கும் மகிழ்ச்சி. அந்தப் பாடலுக்காக ரூ.60 சம்பளம் வழங்கப்பட்டது. அந்தப் பெண் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இந்தப் பெண்தான் எல்லோராலும் போற்றப்படும் இசைக்குயில், இசைராணி என்று அழைக்கப்பட்ட லதா மங்கேஸ்கர். இந்தப் படம் 1949ஆம் ஆண்டு வெளிந்து வெற்றிகரமாக ஓடியது.

பாடல்கள் பாடுவதற்கு முன்பு சிறு, சிறு வேடங்களில் எட்டு திரைப்படத்தில் நடித்துள்ளார். இளம் வயதிலேயே குடும்ப சுமையை சுமக்க வேண்டிய கட்டாயத்தில் வாழ்ந்தவர். பிரபல மராட்டிய நாடக மாஸ்டர் தினாநாத்மங்கேஷ்கர் குஜராத்தை சேர்ந்த சுதா மதி ஆகிய தம்பதிகளுக்கு 29.09.1929ல் இந்தூரில் பிறந்தவர்தான் லதா மங்கேஸ்கர். இவருடன் பிறந்தோர் மீனா, ஆஷா போஸ்லே, ஹிருதியநாத். இதில் ஆஷா போஸ்லே சிறந்த பின்னணி பாடகராக விளங்கினார். தமிழ் திரைப்படங்களில் ஏராளமான பாடல்களை பாடியுள்ளார். ஹிருதியநாத் சிறந்த இசையமைப்பாளராக விளங்கினார். குடும்பமே இசைத்துறையில் பயணித்தவர்கள்.

லதா மங்கேஸ்கர் நாடக மேடையில் கடினமான பாடல்களைக் கூட வெகு இலகுவாக ஹம் செய்யும் திறமையை கண்டு தந்தை தினாநாத் திகைப்படைந்தார்.

தனது தந்தையுடன் நாடக மேடையில் ஏழு வயதில் சுபத்திரா என்ற நாடகத்தில் நாரதர் வேடத்தில் நடித்து இனிய குரலில் பாடல்களைப் பாடி மேடையில் வெற்றிகரமாக பவனி வந்தவர். பின்னர் இசைதான் வாழ்க்கை என்று தீர்க்கமான முடிவெடுத்து தந்தையிடமே இசை பயின்றார். பின்னர் அமனந்தன் கான்சாகோப்பிடம் முறையாக சங்கீதம் பயின்றார்.

அவரது தாய் வழிப்பாட்டி பாடும் கிராமியப் பாடல்கள், வீட்டு கதவு திறந்து மூடும் சத்தம், சிதறடிக்கும் பறவைகள் ஒலி, சல சல என ஓடும் நீரோடை சத்தம் என இப்படி எந்தச் சத்தத்தையும் இசையாய் உள்வாங்கும் இசை நாட்டம் லதா மங்கேஸ்கரிடம் இயல்பாகவே பின்னிப் பிணைந்திருந்தது.

1952ல் வெளியான இந்திப் படமான ஆன் இது தமிழில் ஆன் முரட்டு அடியாள் என்ற பெயரில் டப்பிங் செய்யப்பட்டது. இதில் நான்கு பாடல்களை இவர் பாடினார். 1955ஆம் ஆண்டு உரன்கடலோ என்ற இந்திப் படம் தமிழில் வனரதம் என்ற பெயரில் டப்பிங் செய்யப்பட்டது. இதில் எந்தன் கண்ணாளம் என்றப் பாடலை பாடியிருந்தார். ஆனாலும் கூட தமிழகத்தில் இவரை அனைத்து ரசிகர்களுக்கும் தெரியவில்லை.

**இசைஞானி இளையராஜாதான் 1987ஆம் ஆண்டு இளைய திலகம் பிரபு நடித்த ஆனந்த் என்ற திரைப்படத்தில் "ஆராரோ ஆராரோ நீ வேறோ நான் வேறோ தாயாய் மாறி நான்பாட" என்ற பாடலை பாடியதன் விளைவாக தமிழகம் முழுவதும் தமிழ் ரசிகர்களால் இவர் அறியப்பட்டார்.**

அதன் பின்னர் 1988ஆம் ஆண்டு கமல் நடித்த சத்யா திரைப்படத்தில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் – லதா மங்கேஸ்கர் இணைந்து பாடிய "வலஓசை கல கல என" என்ற பாடலும் இதே ஆண்டில் கார்த்திக் நடித்த என் ஜீவன் பாடுதே என்ற படத்தில் "எங்கிருந்தோ அழைக்கும் என் ஜீவன்" போன்ற பாடல் களால் தமிழகத்தின் தமிழ் ரசிகர்களின் மனதில் நிரந்தரமாக குடிகொண்டு விட்டார்.

இதற்கு பிரதான காரணம் இசைஞானி இளையராஜாதான்.

இவர் புகழின் உச்சியில் இருந்தபோது "வந்தே மாதரம், ஜனகன மன, சாரே ஜகாங்சே" போன்ற தேச பக்தி பாடல்களை பாடியிருந்தாலும் இந்தியா– சீனா யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயிமேரேவாதன் கீ லாகோ எனத் தொடங்கும் பாடலை 1963ஆம் ஆண்டு பொது நிகழ்ச்சியில் இவர் பாட அந்தந் பாடலை பிரதமர் நேரு மேடையின் அருகிலேயே அமர்ந்து கேட்டு கண்களிலிருந்து கண்ணீர் சிந்தினார். அன்று முதல் லதா மங்கேஸ்கர் பொது நிகழ்ச்சிகள் எங்கு நடைபெற்றாலும் அந்தப் பாடலை பாடுவதை தனது வழக்கமாக்கிக் கொண்டார்.

இவரது இசைத்திறனை அறிந்து 2006ஆம் ஆண்டு பிரான்ஸ் அரசு தனது நாட்டின் உயரிய விருதான "லெஜியான் டி ஹானர்" என்ற விருதை வழங்கியது. அன்றைய சூழலில் இவரால் பிரான்ஸ் நாட்டிற்கு நேரில் சென்று அந்த விருதை பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் பிரான்ஸ் அரசாங்கம் அரசு அதிகாரிகளை இந்தியாவிற்கு அனுப்பி வைத்து மும்பையில் உள்ள லதா மங்கேஸ்கர் வீட்டிற்கு சென்று அந்த விருதினை வழங்கினார்கள். இந்தியாவில் எந்த பாடகருக்கும் கிடைக்காக விருதாகும் இது. இவருக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இந்தியாவில் எந்த பின்னணி பாடகரும் ஆங்கில படத்தில் பாடியது கிடையாது.

ஆனால், லதா மங்கேஸ்கர் முகமது ரபியு டன் இணைந்து எட்டார்னஸ் சன்சைன் ஆப் தி ஸ்பாட்லெஸ் என்ற ஆங்கிலப் படத்தில் இரண்டு பாடல்களை பாடியுள்ளார். இது உலக அளவில் அவரை அழைத்துச் சென்றது. புகழின் உச்சியில் இருந்தாலும் வசதியான வாழ்க்கை அமைந்தாலும் அவர் எளிமையான வாழ்க்கையைத்தான் வகுத்துக் கொண்டார். இவரைப் பற்றி இசைத்துறையில் பிதாமகனாகப் போற்றப்படும் நவுஷாத் அலி இப்படி புகழாரம் சூட்டியுள்ளார். அதாவது, ஒவ்வொரு தலைமுறையிலும் சில கலைஞர்கள் தோன்றி லட்சக்கணக்கானவர்களின் இதயங்களை கவர்கிறார்கள். அதில் கே.எஸ்.சைகால், இன்னொருவர் லதா மங்கேஸ்கர். என்னைப் பொறுத்தவரை இந்திய திரை உலகில் சிறந்த பாடகி லதா மங்கேஸ்கர். இவருக்குப் பிறகும் பலர் வருவார்கள், போவார்கள். சில சமயம் லதா மங்கேஸ்கரை விட சிறந்த திறமைசாலிகள் வரலாம். ஆனால் லதா மங்கேஸ்கரைப் போல் இன்னொருவர் திரும்ப வரமாட்டார் அவருக்கு பிறகு அவரே தான். இப்படிப்பட்ட புகழுக்கு பொருத்தமான லதா மங்கேஸ்கர் இந்திய இசைத்துறையில் ஒரு பிதாமகள். வாழ்க அவரதுபுகழ்

தொடர்புக்கு: **9791922710**

## ஆவடி மதிவாணன் கட்சியிலிருந்து நீக்கம்

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஆவடி மாநகராட்சியின் 25 வது வார்டில் போட்டியிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இடம் ஒதுக்கப்பட்டது. கட்சியின் ஆவடி நகர குழு, திருவள்ளூர் மாவட்ட நிர்வாகக்குழு கூடி வேட்பாளரை தேர்வு செய்து மாநிலக் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது. தோழர் எஸ். மயில்வாகனன் அவர்களை வேட்பாளராக மாநிலத் தலைமை அறிவித்துள்ளது.


கட்சி முடிவுக்கு விரோதமாக, கதிர் அரிவாள் சின்னத்துக்கு எதிராக, போட்டி வேட்பாளராக வி.மதிவாணன் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். பல மட்டத்தில் வலியுறுத்தியும் அவர் வேட்புமனுவை திரும்பப் பெற மறுத்து, கட்சியில் இருந்து விலகுவதாக கடிதம் தந்துள்ளார். விலகல் கடிதத்தை நிராகரித்து, அவரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்குவதென ஆவடி நகரக் குழு முடிவு செய்கிறது. அவரோடு கட்சி உறுப்பினர்கள் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும், கட்சியின் வேட்பாளர் தோழர் எஸ் மயில்வாகனுக்கு ஆதரவாக தேர்தல் பணி புரியுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



டி.ராஜா

# ஏழைகளுக்கு எதிரான, கார்ப்ப ஆதரவு பட்ஜெட் 2022 - 2023





**கார்ப்பரேட் மற்றும் பெரு நிறுவனங்களிடம் பா.ஜ.க அரசாங்கம் கொண்டிருக்கும் விசுவாசத்தை மீண்டும் ஒருமுறை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசாங்கத்தின் 2022 – 23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை.**

அடுத்து வரும் 25 ஆண்டுகளுக்கு, புதிய தாராளமய கொள்கைகளே தேசத்தின் பொருளாதாரத்திற்கு அடித்தளமாக இருக்கும் என்றும், பா.ஜ.க அரசாங்கத்தின் பொருளாதார நிலைப்பாட்டையும், அதன் கொள்கை திசைவழியையும் இந்த நிதிநிலை அறிக்கை மீண்டும் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

தனியார்துறை வளர்ச்சிக்கு அதிக உத்வேகம் வழங்கப் படுவதும், பொதுத்துறை மற்றும் சமூகநலன் சார்ந்த துறைகள் முற்றாகப் புறக்கணிக்கப்படுவதும் இந்த அரசாங்கம் ஸ்தாபிக்க விரும்பும் பொருளாதார மாதிரியின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

இந்த அரசாங்கம் யாருக்கு சேவை புரிந்திட விழைகிறது என்பதையும், அதன் உள்நோக்கங்களைக் கருத்தில் கொண்டு அணுகும் போது, இந்த நிதிநிலை அறிக்கை முன்னிறுத்தும் அரசியலை நாம் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்திய வேலைவாய்ப்பு கட்டமைப்பு மிகப்பெரிய அளவிற்கு விவசாயம் மற்றும் அது சார்ந்த இதர தொழில் நடவடிக்கைகளைச் சார்ந்துள்ளது. ஆனால், தற்போது விவசாயத் துறையின் நிலை மோசமடைந்து வருகிறது.

கடந்த 2020 – 21 ஆம் ஆண்டில் 20.2 சதவிகிதமாக இருந்த விவசாயத் துறையின் மொத்த மதிப்பு சேர்ப்பு **(Gross Value Added)** 2021 – 22 ஆம் ஆண்டில் 18.8 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. ஊரகப் பொருளாதாரம் இடர்பாடுகளின்றி இயங்கிட, தேசத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திட, விவசாயத் துறையில் அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

ஆனால், இந்த அடிப்படைப் புரிதலுக்கு எதிரான நிலைப் பாட்டை பா.ஜ.க அரசாங்கம் கொண்டுள்ளது. விவசாயம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை பெருமளவில் குறைத்துள்ளது. விவசாயத்துறை நெருக்கடியை எதிர் கொண்டு சமாளிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

கடந்த 2021 – 22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் திருத்திய மதிப்பீட்டின்படி 4,74,750.47 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு 3,70,303 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, நிதி ஒதுக்கீடு சுமார் ஒரு லட்சம் கோடிக்கும் அதிகமாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நெல் மற்றும் கோதுமை கொள்முதலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும், இந்த ஆண்டு ஒதுக்கப் பட்ட நிதி 10,000 கோடி ரூபாய்க்கும் மேலாகக் குறைக்கப் பட்டுள்ளது. விவசாயிகள் போராட்ட இயக்க கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்ச ஆதார விலைக்கான சட்டப்பூர்வ உத்தரவாதத்தைப் பற்றி நிதியமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை.

சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் ஆதரவைப் பெற்ற நமது நாட்டின் விவசாயிகளிடம் தோல்வியுற்றதை பா.ஜ.க தலைமையிலான அரசாங்கத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று தெரிகிறது. சர்ச்சைக்குரிய மூன்று வேளாண் சட்டங்களை விவசாயிகள் திரும்பப் பெற வைத்தனர்.

இதற்குப் பதிலடியாக, பழிவாங்கும் நடவடிக்கையாக, பா.ஜ.க தலைமையிலான அரசாங்கம் ஊரகப் பொருளாதாரத்தை முடக்குகிறது.மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் ஒரு அரசாங்கத்திற்கு பழி உணர்ச்சியானது உரிய தகுதிப்பாடாக இருக்க முடியாது.

பெருந்தொற்று காரணமாக உண்டாகியுள்ள பொருளாதார பேரழிவு மற்றும் பெருந்தொற்று காலத்திற்கு முன்பாகவே, அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருளாதார சீரழிவு ஆகியவற்றில் இருந்து மீண்டு எழ இந்திய பொருளாதாரம் இப்போதும் முயன்று வருகிறது.

ஆனால், இந்த அரசாங்கத்திற்கு நுகர்வோர் நிலைத்தேவைப் பற்றிய, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் உள்ள நிலைத்தேவைப் பற்றிய விழிப்புணர்வு கூட இல்லை என்றே தோன்றுகிறது. ஊரக மேம்பாட்டுக்கான ஒதுக்கீடு 5.59 சதவிகிதத்தில் இருந்து 5.23 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

**பெருந்தொற்று காலத்தின் போது அதீத வறுமை காரணமாக, ஆதரவற்றுக் கிடந்த கோடிக்கணக்கான மக்களை 'மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம்' பாதுகாப்பு அரணாக நின்று காத்தது. 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வேலைக்கான நிலைத்தேவை 4.59 கோடி நபர்கள் என்ற அளவில் இருந்தது. இருப்பினும், நிலவி வரும் வேலையின்மை குறித்த எண்ணிக்கை நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது.**

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவது தவறான பொருளாதார நிலைப்பாடு மட்டுமின்றி, தவறான அரசியல் நடைமுறையும் ஆகும். வேலைகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் மீது அரசாங்கத்திற்கு சிறிதும் அக்கறை இல்லை என்பதையே இந்தப் போக்கு அம்பலப் படுத்துகிறது.

2021–22 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி, ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஒதுக்கீடு 98,000 கோடியாக இருந்தது. ஆனால், 2022 23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 73,000 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறையும், மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளும் கடந்த ஆண்டில் பலமுறை தலைப்புச் செய்திகளாக வெளியான போதும், பா.ஜ.க அரசாங்கத்தின் செவிட்டுக் காதுகளில் விழுவதாக இல்லை.

சமூகச் செல்வத்தின் உண்மையான உற்பத்தியாளர்களான இந்நாட்டின் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை இந்த அரசாங்கம் அதன் வசதிக்கேற்ப மறந்துவிட்டு, கார்ப்பரேட் எஜமானர்களுக்கு அடிமைச் சேவகம் செய்து வருகிறது.

'சமத்துவமின்மை விதைக்கிறது' **(Inequality Kills)** என்ற தலைப்பில் ஆக்ஸ்பேம் இண்டர்நேஷனல் அமைப்பின் அறிக்கை அண்மையில் வெளியானது. நமது நாட்டில் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருவது குறித்து இந்த அறிக்கை எச்சரித்துள்ளது. மேலும், இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது பின்வருமாறு:

"2020 ஆம் ஆண்டில் 102 ஆக இருந்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை பெருந்தொற்று காரணமாக, மோசமான ஆண்டாக அமைந்துவிட்ட 2021 ஆம் ஆண்டிலும் கூட 142 ஆக உயர்ந்துள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில், நாட்டின் மக்கட்தொகையில் அடித்தட்டில் உள்ள 50 சதவிகித மக்களின் பங்கு தேசிய சொத்துக்களில் வெறும் ஆறு சதவிகிதம் ஆகும்."

தற்போதைய அபாயகரமான சூழலை மாற்றிட, இந்தியாவின் பணக்காரர்களுக்கு ஆதரவான வரிவிதிப்பு கொள்கைகளில் மாற்றங்கள் செய்திடவும், ஏழை மக்கள் தங்களுக்கான சேவைகளை எளிதில் பெற்றிடவும், இந்த அறிக்கையில் சில சிறிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டு உள்ளன.

# பிரபல பாடகி லதா மங்கேஷ்கர் மறைவு



## தேசிய செயற்குழு இரங்கல்

'இந்தியாவின் நைட்டிங்கேல்' என்று அனைவராலும் கொண்டாடப்படும் பிரபல பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர் பிப்ரவரி 6 ஆம் நாள் அன்று மும்பையில் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 92. அவரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

பாரத் ரத்னா விருது பெற்ற லதா மங்கேஷ்கர், இந்திய திரைத்துறையின் ஒளிவீசும் நட்சத்திரமாகத் திகழ்ந்தார். எண்ணற்ற இந்தி திரைப்படங்களுக்கு பாடல்கள் பாடியுள்ளார். இதர பிராந்திய மொழிகளிலும் அவர் பாடல்கள் பாடியுள்ளார்.

இசைப் பாரம்பரியம் நிறைந்த குடும்பத்தில் பிறந்த அவர், இசையமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார் என்பதுடன் சில திரைப்படங்களையும் தயாரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது..

இந்தியர்கள் அனைவரது இதயங்களிலும் லதா மங்கேஷ்கர் என்றென்றும் வாழ்வார். இசைக்கெனவே தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்த அவரது மறைவினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவது எளிதானதாக இராது.

அவரை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தார் அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இசை உலகில் புகழோடு விளங்கும் அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்துகிறது.


இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



**முதலாளித்துவ சக்திகள் அனைத்தும் மார்க்ஸ் மீது அவதூறு புரிவதில் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டு செயல்படுகின்றன. பதில் கூறவேண்டியவர்களுக்கு மட்டும் விளக்கம் கொடுத்தார்.**

**– ஏங்கல்ஸ்**

# ரேட்




இந்தியாவில் உள்ள 98 பணக்கார குடும்பங்களின் சொத்துக்கள் மீது விதிக்கப்படும் 4 சதவிகித வரி, இரண்டு ஆண்டுகளுக்கும் கூடுதலாக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் நிதி தேவைகளை பூர்த்தி செய்திட, 17 ஆண்டுகளுக்கு நாட்டின் மதிய உணவு திட்டத்தையும் செயல்படுத்த வழிவகை செய்யும் என்று இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதுபோலவே, 98 கோடீஸ்வர குடும்பங்களின் சொத்துக்கள் மீது விதிக்கப்படும் 1 சதவிகித வரி, 7 ஆண்டுகளுக்கும் கூடுதலாக ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதித் தேவையை நிறைவு செய்யும் அல்லது இந்திய அரசின் பள்ளி கல்வித் துறையின் நிதித் தேவையை ஓராண்டு காலத்திற்கு நிறைவு செய்யும்.

மக்கள் விரோத போக்கைக் கொண்டுள்ள இந்த அரசாங்கம், அதன் பணக்கார மற்றும் முதலாளித்துவ நண்பர்கள் கொஞ்சமும் பாதிப்படைந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் இருக்கிறது.செல்வ வளங்களை மறுபகிர்மானம் செய்யும் தொலைநோக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றாலும், இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கூட பா.ஜ.க அரசாங்கத்தால் மேற்கொள்ள முடியவில்லை.

பெருந்தொற்று காலத்தில் இந்தியாவின் பொது சுகாதார கட்டமைப்பு மிக மோசமாகத் தகர்ந்து போனதுடன் பொறுப்புடைத்தன்மையற்ற, பாகுபாடு கொண்ட மற்றும் ஏழை மக்களுக்கு எட்டாத தனியார் மருத்துவத் துறையின் மீது உள்ள அதீத சார்பு என்னும் அரசாங்கத்தின் மூடத்தனத்தையும் வெளிப்படுத்தியது. பெருந்தொற்று காலத்தின் மூன்றாவது அலையின் போதுகூட, அரசாங்கம் படிப்பினைகளைப் பெற மறுக்கிறது.

மக்களின் சுகாதாரமும், நலமும் நிதிநிலை அறிக்கையின் 6 தூண்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. ஆனால், கடந்த ஆண்டு மிக அதிக நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற இந்தத் துறைக்கான நடப்பு ஆண்டு ஒதுக்கீடு மிகச் சொற்பமான அளவுக்குத்தான் அதிகரிக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு 0.96 சதவிகிதம் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக்கான ஒதுக்கீடு 3.90 சதவிகிதம் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. நமது சுகாதார உள்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் களைய இந்த நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல. மேலும், துரதிர்ஷ்டம் என்னவென்றால், இந்தப் புதிய அறிவிப்புகளும், சொற்ப நிதி ஒதுக்கீட்டு அதிகரிப்பும், பொது சுகாதார உள்கட்டமைப்பு மூலமாக தனியார் துறைக்குப் பயனளிக்கக் கூடியதாகவே உள்ளன.

கோவிட் தடுப்பூசிக்கான நிதி ஒதுக்கீடு 87 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. பெருந்தொற்று அபாயத்தில் இருந்து நாம் மீண்டுவிட்டதாக அரசாங்கம் கருதுவதைத் தான் இது சுட்டிக் காட்டுகிறது. பசி மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்து சமூக குறியீடுகளில் இந்தியாவின் வீழ்ச்சியானது மோடி ஆட்சிக்காலத்தின் சிறப்பம்சமாகத் துலங்குகிறது. இவற்றை சீர்படுத்துவதற்குப் பதிலாக,

**பள்ளிக் கூடங்களில் மதிய உணவு வழங்குவதற்கான நிதி ஒதுக்கீட்டை 11,500 கோடி ரூபாயில் இருந்து 10,233 கோடி ரூபாயாக (11 சதவிகிதம் ) குறைந்திருப்பது, குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டை மேலும் அதிகரிக்கவே செய்யும்.**

பள்ளி கல்வியில் சேர்க்கப்படாத குழந்தைகள் (6 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட ) 2018 ஆம் ஆண்டில் 2.5 சதவிகிதம் என்றும், 2021 ஆம் ஆண்டில் 4.6 சதவிகிதம் என்றும் **ASER (Annual Status of Education Report )** கூறுகிறது. கல்வி பெரும் உரிமை புதைகுழியில் தள்ளப்படுவது தெளிவாகத் தெரிகிறது. இந்த அறிக்கையின்படி உற்று நோக்கினால், நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பவையாக இருக்கிறது. பொது சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு இவையனைத்தும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. பா.ஜ.க ஆட்சியின் கீழ் தேசத்தின் வருங்காலம் ஒளி வீசக்கூடியதாக இல்லை.

பெருந்தொற்றினால் சாதாரண மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் பெரும்பகுதியினராக உள்ள தலித்துகள் மற்றும் இதர விளிம்புநிலை சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை நிவாரணம் எதுவும் வழங்கவில்லை.

போட்டிக்கான சமதள வாய்ப்பு குறைவாக இருக்கும் சூழலில், அதனை மேலும் சீர்குலைப்பது போல், எவ்வித மேற்பார்வையும் இன்றி, வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் நம் நாட்டில் கல்வி நிறுவனங்களைத் திறந்திட வழிவகை செய்ய அரசாங்கம் உத்தேசிக்கிறது. இத்தகைய பல்கலைக்கழகங்கள், அவற்றின் கட்டணமுறை மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் சமூகநீதிக்கு எதிரான போக்கு ஆகியவை வசதி படைத்தோருக்கு மேலும் பயனளிக்கும் என்பதோடு தலித்துகள் மற்றும் இதர விளிம்புநிலை சமூகத்தவருக்கு மேலும் பாதிப்புகளை உண்டாக்கும்.

அதிகரித்து வரும் தனியார்மயம் சமூகநீதி கோட்பாட்டின் வேர்கள் மீது பலமான தாக்குதலைத் தொடுத்து வருகிறது. ஆனால், அரசாங்கம் எவ்வித தயக்கமும் இன்றி, அதற்கே உரித்தான பிரத்தியேக கார்ப்பரேட் ஆதரவு செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

நமது சமுதாயத்தின் விளிம்புநிலை சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கான நிதி ஒதுக்கீடு உயர்த்தப்படவில்லை. சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, சிறுபான்மைச் சமூக நலத்துறை ஆகிய அமைச்சகங்களுக்கு மிகச் சொற்பமான அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பட்டியல் இனத்தவருக்கான திட்டம், பழங்குடி இனத்த வருக்கான துணை திட்டம் ஆகியவை இல்லாத நிலையில், மோடி அரசாங்கமும், நிதி ஆயோக் அமைப்பும் அந்த மக்கள் திரளை அண்டிப் பிழைக்கும் கூட்டம் என இழிவுபடுத்தி வருகின்றன. அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள 'கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை' கூட இல்லாதவர்களாக அந்த மக்கள் இழிவுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.**

நுகர்வோர் நிலைத்தேவையை உருவாக்கிட, பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்புகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும், நேரடி நிதியுதவி வழங்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் பலமுறை கோரிக்கை விடுத்தன. ஆட்சியில் உள்ளவர்களின் சிந்தனைக்கு இந்தக் கோரிக்கை எட்டவில்லை. வறுமை, சமத்துவமின்மை, வேலையின்மை மற்றும் நோய் ஆகியவற்றின் பிடியில் தேசம் சிக்கிச் சுழன்று கொண்டிருக்கிறது. ஆனால், இந்த அரசாங்கமோ, 'மூலதன செலவினம்' வளர்ச்சியை உருவாக்க இருக்கிறது என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது.

மூலதன செலவினத் தொகையில் பெரும் பகுதி ஏர் இந்தியா நிறுவன கடன் மற்றும் ராணுவ செலவினங்களுக்கானத் தொகை ஆகும். 'தேசியமயமாக்கப்பட்ட நஷ்டங்கள் மற்றும் தனியார்மயமாக்கப்பட்ட லாபங்கள்' என்பதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக ஏர் இந்தியா விவகாரம் உள்ளது.

இரண்டு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மோடி அரசாங்கம் தோல்வி அடைந்துள்ளது. ஆனால், நிதியமைச்சரோ 60 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கப் போவதாக மீண்டும் வாக்குறுதி அளிக்கிறார். இவர்களின் வானளாவிய வாக்குறுதிகளும், முடிவான தோல்விகளும் ஜேம்ஸ் பால்டுவினின் கூற்றை நமக்கு நினைவூட்டுகிறது:

"நீங்கள் உரைப்பதை என்னால் நம்ப இயலவில்லை ஏனென்றால் நீங்கள் செய்வதை நான் காண்கிறேன்."

சமுதாயத்தின் அனைத்து பகுதி மக்களுக்கும் அரசாங்கம் மாபெரும் துரோகம் இழைத்திருக்கிறது. அனைவரும் இதைக் கண்டுணர்ந்து வெகுண்டெழ வேண்டும்!

தமிழில்: **அருண் அசோகன்**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடுகள்




**சாப்பாபா கிளை:** சாப்பாபா கிளை மாநாடு சேலம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் ஜெ.நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலாளராக பி.என்.சிவா, துணை செயலாளராக து.நாகராஜன், பொருளாளராக சுரேஷ் தேர்வு செய்யப்பட்டனர்.

**சின்ன திருப்பதி கிளை:** சின்னதிருப்பதி கிளை மாநாடு சேலம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் ஆசிப் உசைன் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலாளராக எஸ்.முகமது சஃபி, துணை செயலாளராக ஆசிப் உசைன், பொருளாளராக முகமது ஷெரீப் பாபு ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இரண்டு கிளை மாநாடுகளிலும் அஸ்தம்பட்டி மண்டல செயலாளர் ஆர்.எல். முத்துராஜகோபால் அரசியல் உரை நிகழ்த்தினார்.

**பொச்சாரம்பட்டி கிளை:** தருமபுரி மாவட்டம்,பென்னாகரம் வட்டம் பொச்சாரம்பட்டி கிராமத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு நடைபெற்றது. கூட்டத்திற்கு நிர்வாகி செல்வம் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.மாதையன் இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார். பென்னாகரம் வட்டார செயலாளர் பி. முனியப்பன், மாவட்டக்குழு உறுப்பினர் நரசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளை செயலாளராக சுப்பிரமணி, துணை செயலாளராக சக்தி, கிளை பொருளாளராக செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**ராமநாதபுரம் கிளை:** திருப்பூர் மாவட்டம் அவினாசி ஒன்றியம் ராமநாதபுரம் கிளை மாநாடு பி.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் கட்சி கொடியை ராஜாமணி ஏற்றிவைத்தார். மாநாட்டில் கட்சியின் ஒன்றியச் செயலாளர் கே.எம்.இசாக் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து எடுத்துரைத்தார். மாநாட்டில் செயலாளராக பன்னீர் (எ)கருப்பசாமி துணைச் செயலாளராக செல்வி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.



**மத எதிர்ப்பை தத்துவ ரீதியாக, லட்சிய ரீதியாக வர்க்கப் போராட்ட அடிப்படையில் எதிர்த்துப் போராட வேண்டும். வர்க்கப் போராட்டத்திற்கு வெளியில் பகுத்தறிவு போராட்டம் என்று எந்த சந்தர்ப்பத்திலும் கையாண்டு விடும் தவறை செய்து விடக் கூடாது. - லெனின்**

# முத்துப்பேட்டை பி.வீரபத்திரன் மறைவு

● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட முன்னோடியும், மூத்த உறுப்பினருமான தோழர் பி.வீரபத்திரன் (96) பிப். 03 அன்று காலமானார் என்ற ஆழ்ந்த வேதனையளிக்கும் துயரச் செய்தி கிடைத்தது.

மூத்த தலைவர் பி.வீரபத்திரன் முத்துப்பேட்டை வட்டாரத்தில் உள்ள எடையூரில் பிறந்தவர். சிறு வயது முதல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் இயக்கங்களில் பங்கேற்று வருபவர். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் வாழ்க்கை நலனுக்காக பல போராட்டங்களில் பங்கெடுத்து பலமுறை சிறை சென்றவர். முத்துப்பேட்டை வட்டார மக்களின் நன்மதிப்பை பெற்றவர். மக்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் முறையில் முத்துப்பேட்டை ஒன்றியப் பெருந்தலைவராக தேர்வு செய்யப்பட்டு ஐந்தாண்டு காலம் மிகச் சிறப்பாக பணியாற்றியவர்.

கட்சியின் அமைப்பில் ஒன்றியச் செயலாளர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர், மாநிலக்குழு உறுப்பினர் என பல்வேறு நிலைகளில் பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டவர். அனுபவம் நிறைந்த நல்ல மக்கள் ஊழியரான வீரபத்திரன் மறைவு எளிதில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

பி.வீரபத்திரனின் வாழ்விணையர் தனபாக்கியம், மற்றும் இவர்களது நான்கு மகன்கள், மூன்று மகள்களும் இருக்கின்றனர்.

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்தினார்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## நீட் தேர்வு: மாநில அரசின் மசோதாவை

# திருப்பி அனுப்பிய ஆளுநர்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

பாஜக ஒன்றிய அரசு 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய "நீட்" தேர்வு முறைக்கு ஆரம்ப நிலையில் இருந்தே தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் பாடத் திட்டத்தில் பயின்று வரும் அடித்தட்டு மக்களின் மருத்துவக் கல்வி உரிமையை மறுத்து நிராகரிக்கும் "நீட்" தேசிய திறன் மற்றும் நுழைவுத் தேர்வு தமிழ் நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. அரியலூர் மாணவி அனிதா தொடங்கி பத்துக்கும் மேற்பட்ட மாண வர்கள் தற்கொலை செய்து கொண் டதும், அந்த துயர நிலை தொடர்வதும் நெஞ்சை சுடும் உண்மையாகும்.

"நீட்" தேர்வு முறையை கைவிட்டு, பழைய நடைமுறையை பின்பற்றி மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க் கைக்கான தனிச்சட்டம் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முயற்சி எடுத்து, சட்ட மன்றப் பேரவையில் சட்ட மசோதா நிறைவேற்றி ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த மசோ தாவை தற்போது ஆளுநர் திருப்பி அனுப்பி இருப்பது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுக்கு எதிரானது.

ஆளுநரின் இந்த அணுகுமுறை ஜனநாயக வழிமுறைகளில், சட்ட நடைமுறைகளை பின்பற்றி சமூக நீதி கேட்கும் மக்களை ஆத்திரமூட்டும் செயலாகும். கூட்டாட்சி கோட்பாட்டை மதித்து நடக்கும் தமிழ்நாடு அரசின் மீது மோதல் போக்கை உருவாக்கும் ஆளுநரின் அத்துமீறலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

நீட் தேர்வுக்கு பதிலாக தமிழ்நாட்டு மாணவர்கள் நலனையும், சமூகநீதி கொள்கை நடைமுறையினையும் உறுதி செய்யும் முறையில் தமிழ்நாடு அரசு மீண்டும் மசோதாவை ஆளு நருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார் பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியுள்ளார்.

# நீட் விலக்கு மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பியது மாநில உரிமைகளுக்கு எதிரானது

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கண்டனம்

சமூக சமத்துவத்திற்கான டாக் டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள் ளதாவது:

நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இளநிலை மருத்துவ இடங்களுக்கு விலக்கு பெறுவதற்காக, தமிழக சட்ட மன்றத்தில் கடந்த செப்டம்பர் மாதம் ஏகமனதாக மசோதா நிறைவேற்றப் பட்டது. ஆளுநருக்கு அனுப்பி வைக் கப்பட்ட இம் மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு ஆளுநர் அனுப்பி வைக்காமல் காலம் தாழ்த்தி வந்தார். இந்நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் ஆளுநரின் ஜன நாயக விரோதப் போக்கை கண்டித்து வந்தன.

அரசியல் சட்டத்திற்கு விரோதமாக செயல்படும் ஆளுநரின் போக்கிற்கு எதிராக, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத் துவ மாணவர்கள் சங்கம் மற்றும் பல்வேறு மாணவர் அமைப்பு களும் குரல் கொடுத்து வந்தன. நாடாளுமன்றத்திலும் இந்த பிரச் சனை தமிழக நாடாளுமன்ற உறுப்பி னர்களால் எழுப்பப்பட்டது.

இந்நிலையில் ஆளுநர் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை சுட்டிக்காட்டி, நீட் நுழைவுத்தேர்வு சமூகநீதிக்கு எதிராக இல்லை என்ற காரணத்தைக் கூறி ,அந்த மசோதாவை,தமிழக அரசுக்கே திருப்பி அனுப்பி உள்ளார்.

ஆளுநரின் இந்த செயல் மாநில உரிமைகளுக்கு எதிரானது. மத்திய பாஜக அரசு என்ன நினைக்கிறதோ அதை நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு முகவராக தமிழக ஆளுநர் செயல் படுகிறார்.

ஆளுநரின் இந்தப் போக்கு சமூகநீதிக்கும், கிராமப்புற மாண வர்களுக்கும், மாநிலத்தில் படிக்கும் மாணவர்களுக்கும், ஏழை எளிய மாணவர்களுக்கும் முதல் தலைமுறை மாணவர்களுக்கும் எதிரானது; கடும் கண்டனத்திற்குரியது. தமிழக ஆளுநர் தமிழக சட்டமன்றத்தையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் இழிவுபடுத்தியுள்ளார். எனவே, மாநில உரிமைகளுக்கு எதிராக செயல்படும் ஆளுநரை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.

இந்த மசோதா குறித்து அடுத் தக் கட்ட நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண் டுமென சமூக சமத்துவத்திற்கான டாக்டர் சங்கம் தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### புதுமனை புகுவிழா இரா.நல்லகண்ணு வாழ்த்து

தொழிலாளர் நலத்துறை அமைச் சர் வி.வெ.கணேசன் அவர்களின் மகள் சிந்துஜா வெனிஸ் – ரமேஷ் ஆகியோரின் புதுமனை புகு விழா பிப்.6 அன்று சென்னை நந் தனம் தாமரை குடியிருப்பில் நடை பெற்றது. இதில் இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சியின் மூத்த தலை வர் இரா.நல்லகண்ணு கலந்து கொண்டு வாழ்த்தினார். தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக் கத்தின் மாநிலச் செயலாளர் எஸ்.கே. சிவா, தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஏழை, எளிய மாணவர்களின் கல்வி உரிமையை மறுக்கின்ற மத்திய பட்ஜெட்

● ஏஐடியூசி கண்டனம்

ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

2022–23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களுக்கு எதிரானது கார்ப்பரேட் மற்றும் பெரும் முதலாளிகள் மேலும் பணக்காரர்களாக வழிவகுக்கிறது.

கல்வி, மருத்துவம், உணவு, கண்ணியமான வாழ்க்கை, இதனை உறுதிப்படுத்த வேலையும் ஊதியமும் உணவு மற்றும் தொழில் உற்பத்தி உள்கட்டமைப்பு மேம்பாடு இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் முதல் 10% பணக்காரர்களிடம் இந்தியாவின் மொத்த சொத்துக்களின் சரிபாதி உள்ளது. அதே நேரத்தில் மொத்த ஜனத்தொகையில் 50% மக்களிடம் வெறும் 6 சதவீத சொத்துக்களே உள்ளன. பெரும் பணக்காரர்களுக்கு செல்வ வரியை மீண்டும் அறிமுகப்படுத்தி ஒரு சதவீதம் கூடுதல் வரி விதித்தால் வருவாயைஈட்ட முடியும் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்த முடியும். 2020ஆம் ஆண்டில் புதிய கல்விக் கொள்கை கொண்டுவந்த ஒன்றிய அரசு நாட்டின் மொத்த உற்பத்தி குறியீட்டில் கல்விக்காக 6 சதவீதம் நிதி தருவது என முடிவு செய்தது. ஆனால் பட்ஜெட்டில் 3.1% மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ஏழை எளிய மாணவர்களின் கல்வி கற்பதை மறுப்பதாகும். சென்ற ஆண்டு ரூ74,820 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இப்போது சரிபாதியாக குறைக்கப்பட்டு ரூ47,011 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு சி.சந்திரகுமார் கூறியுள்ளார்.

# பெண்களைப் புறக்கணிக்கும் ஒன்றிய பட்ஜெட் 2022 - 23

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் கண்டனம்

மாதர் சம்மேளனத்தின் தலைவர் அருணா ராய் மற்றும் பொதுச் செயலாளர் ஆனி ராஜா 2022–23ம் ஆண்டிற்கான ஒன்றிய பட்ஜெட் தேசத்தின் தற்போதைய சமூகபொருளாதார எதார்த்தத்தைப் பிரதிபலிக்கவில்லை என்று கடும் ஏமாற்றம் தெரிவித்தனர். இந்தப் பட்ஜெட் வளர்ச்சியின் பெயரால் மக்கள் நலனைப் பலிகொடுத்துக் கார்ப்பரேட்டுகளின் லாபத்தை அதிகரிக்கும் பட்ஜெட் என விமர்சித்தனர்.

பாஜக தலைமையிலான ஒன்றிய என்டிஏ அரசு பெண்களைத் தேர்தல் அரசியலுக்கான வெறும் கருவிகள் மட்டும் என நினைக்கிறது; தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்கள் சம பங்களிக்கும் குடிமக்கள் எனக் கருத மறுப்பது ஏற்க முடியாத ஒன்று. அவர்களின் அந்தக் கருத்தைத்தான் பிப்ரவரில் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடக்கத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்தும், பிப்ரவரி 2ல் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டிலிருந்தும் தெரிகிறது.

அவர்கள் நீட்டி முழக்கும் 'பொருளாதார வளர்ச்சி' என்பதன் விளைவு வேலையில்லாத வளர்ச்சி மட்டுமல்ல, இருக்கும் வேலை களையும் பறிப்பதும் ஆகும். ஏழ்மையும் பசியும், இரத்த சோகை யும் ஊட்டச்சத்துக் குறைபாடும் அபாயகரமான அளவு அதிகரித் துள்ளது. ஆன்லைன் கல்வி முறையால் பெரும் எண்ணிக்கை மாணவர்கள் பள்ளி இடைநிற்றல் ஆபத்து. இதில் குறிப்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும், பெண் குழந்தைகளுமே. மெல்ல மெல்ல வேலைஇல்லாத பெண்கள் எண்ணிக்கை நிச்சயமாக அதிகரிக்கிறது.

பல திட்டங்களை ஒருங்கிணைத்துப் புதிய பெயரில் அவர்கள் முழங்கும் 'ஸக்ஷம் அங்கன்வாடி போஷன்2' திட்டத் திற்கும்கூட கூடுதல் ஒதுக்கீடு எதுவும் இப்பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. இத்திட்டம் ஆறு வயது வரை உள்ள குழந்தைகளின் உடல்நலன், ஊட்டச்சத்து மற்றும் பதின் பருவப் பெண்கள், கர்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நலன்களை நோக்கமாகமுடைய பல்வேறு திட்டங்களின் ஒருங் கிணைந்த வடிவமானாலும் பட்ஜெட்டில் கூடுதல் ஒதுக் கீடு செய்யப்படவில்லை. அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களை நிதியமைச்சர் தொழிலாளர்களாக அங்கீ கரிக்கவும் இல்லை, அவர்களுக்கான முறையான ஊதியம் மற் றும் படிகள் குறித்து உறுதியளிக்காது மீண்டும் மௌனமாக இருந்தார்.



எப்போதுமில்லாத வேலையில்லாத் திண்டாட்ட நெருக்கடியை நாடு சந்திக்கிறது; இந்த நிலையிலும் மோடி அரசு 'மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதியளிப்பு' திட்டத்திற்கு ஒதுக்கீட்டை வெட்டிக் குறைக்கிறது. தொற்று காலகட்டத்தில் கிராமப்புற இந்தியாவின் நிர்க்கதியான பல்லாயிரம் குடும்பங்களுக்கு இத்திட்டம்தான் ஆறுதல் அளித்தது.

ஆனாலும் மோடி அரசு கூடுதல் வேலை நாட்களை வழங்க வசதியாகத் திட்ட ஒதுக்கீட்டை அதிகரிக்க மறுக்கிறது. தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு பிற செலவுகள் மற்றும் சென்ற ஆண்டிற்கு வழங்க வேண்டிய ஊதிய நிலுவைத் தொகையை வழங்கிய பிறகு மீதம் உள்ள தொகை பணி உறுதி அட்டைதாரர்களுக்கு 25 நாட்கள் வேலை வழங்கக்கூட போதுமானதில்லை.

பல மாநிலங்களில் மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பெரும்பான்மை பயனாளிகள் பெண்களே ஆவர்.

எப்போதும்போல ஒன்றிய பட்ஜெட் எல்லாச் சமூகப் பிரிவு களையும் புறக்கணித்துள்ளது. இந்தியப் பெண்கள் ஆழமான கடும் நெருக்கடியில் உள்ளனர். எனவே, இந்நெருக்கடியைத் தீர்க்கவும் அரசியல் சட்டம் வழங்கிய கண்ணியத்துடன் வாழும் உரிமையை உறுதி செய்யும் உடனடி நடவடிக்கைகளை எடுத்து நியாயமான பட்ஜெட் ஒதுக்கீடுகளைச் செய்யவும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வலியுறுத்திக் கோருகிறது.

ஊட்டச் சத்து குறைபாடு மற்றும் இரத்த சோகை பிரச்ச னைக்குத் தீர்வுகாண ரேஷன் கடைகளில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் வழங்குவதை வலிமைப்படுத்தி அனைவருக்குமான 'பொது உணவு வழங்கல் முறை'யை (பிடிஎஸ்) உறுதி செய்ய அரசு தேவையான நடவ டிக்கைகளை எடுப்பது அவசர அவசியமும் கட்டாயமானதும் ஆகும். பெருவாரியான பெண்களுக்குப் பாதுகாப்பான பணிச் சூழ்நிலையில் வேலைவாய்ப்புகளைப் பட்ஜெட் ஏற்படுத்த வேண்டும்; அதற்குச் சுகாதாரம் மற்றும் கல்விப் பிரிவுகளில் பொதுத் துறை முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என மாதர் சம்மேளனம் வலியுறுத்துகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கை:

# ஏழைகளின் துயரத்தில் ஏற்றம் பெறும் பெரும் முதலாளிகள்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் குற்றச்சாட்டு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஒன்றிய நிதித்துறை அமைச்சர் 2022– 23க்காண நிதிநிலை அறிக்கையை 31.1.2022 அன்று நாடாளுமன்றத்தில் முன்வைத்து பேசியதும்... மோடி அவர்கள் இது இன்னும் 25ஆண்டுகளுக்கான தொலைநோக்கு பார்வை கொண்டது என்று கூறியதும் கேலிக்குரியதாகும். வேளாண்மை நெருக்கடிகளை தீர்ப்பதற்கான முறையிலோ அதற்கான தேவையான நிதி ஒதுக்கீடோ இதில் இல்லை. விளைபொருட்களுக்கு சி2 + சேர்த்து வழங்குவதற்கான விலை நிர்ணயம் மற்றும் அரசு உத்தரவாதகொள்முதல் சட்டங்கள் குறித்தோ, ஐக்கிய விவசாயிகள் முன்னணியுடன் போடப்பட்ட ஒப்பந்தம் குறித்தோ எந்த அறிவிப்பும் இல்லாதது என்பது ஒன்றிய அரசின் ஏமாற்றும் செயலாகதெரிகிறது.இது சம்பந்தமாக அவையில் விளக்கம் கோரியபோது 6 மாநில தேர்தல் முடிந்து பேசிட உள்ளோம் என வேளாண் அமைச்சர் கூறியுள்ளார். தேர்தல்களுக்காகவே விவசாயிகளை நம்ப வைத்து ஏமாற்றி உள்ளனர். மீண்டும் நாடு தழுவிய போராட்டத்திற்கு விவசாயிகள் இறங்க உள்ளனர்.

தொடர்ந்து இரசாயன உரங்களுக்கான மானிய தொகையை குறைத்து வருவது போல் ..கடந்த ஆண்டைவிட இப்போதும் மிகக்குறைவாக ஒதுக்கீடு செய்துள்ளது.

மரபுசார் இயற்கை விவசாயத்திற்கான இருதிட்டங்கள் மூலம் அதன் பரப்பை உயர்த்திட உள்ளதாம். இயற்கை விவசாயத்திற்கு பாய்ச்சல் வேகத்தில் உடனடியாக செல்ல முடியாது . இராசயனஉர பயன்பாடு ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகி வரும் போது ஒவ்வொரு ஆண்டும் இதற்கான மானியத் தொகையை குறைப்பது என்பது விவசாயிகளுக்கு கூடுதல் செலவை ஏற்படுத்தி வருகிறது.

ஒரு கோடியே 63 லட்சம் விவசாயிகளிடம் 1208 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை மற்றும் நெல்லை கொள்முதல் செய்திட 2 லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு 1286 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு 2.48 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 11 ஆயிரம் கோடி குறைக்கப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் அரசு கொள்முதல் பொறுப்பிலிருந்து விலகிவருகிறது. எஞ்சிய பல கோடி விவசாயிகள் வியாபாரிகளிடம் தான் விற்பனை செய்ய வேண்டும். 100கிலோ நெல்லுக்கு அரசு நிர்ணய விலை ரூ.2000 தனியார்களிடம் விற்பனை செய்தால்விவசாயிகள் பெறுவதோ ரூபாய் 1500 தான். இப்படி கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பை ஒவ்வொரு வருடமும் விவசாயிகள் அடைகிறார்கள். இந்தச் சூழலில் முழு கொள்முதல் உத்தரவாதம் வேண்டும்.

பருவகாலம் மாறுதல் கடல்நீர் வெப்ப உயர்வு இயற்கை மாறுதல்கள் என ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் பேரிடர் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. பேரிடர் கால நிதி வரன்முறையை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. இந்நிலையில் பேரிடர் நிதிக்கு முன்னர் 16 ஆயிரம் கோடி ரூபாய் என அறிவித்த அரசு தற்போது இந்த தொகையை 500 கோடியை குறைத்து ஒதுக்கீடு செய்துள்ளது.

வடமாநிலங்களின் நதிகள் இணைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது போல் கோதாவரி காவிரி நதிநீர் இணைப்புக்கு முதல் கட்ட நிதி ஒதுக்கீடு கூடஇல்லை.

விவசாயிகளுக்கான கிசான் சமான் நிதி உதவி திட்டம் மூலம் அனைத்து விவசாயிகளும் பலன் பெறும் வகையில் இதில் விரிவாக்கம் செய்திட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை. இந்த தொகையை வருடத்திற்கு ரூ6000 என்பதை 12 ஆயிரமாக உயர்த்திட வேண்டும் என்ற கோரிக்கையும் மறுக்கப்பட்டுள்ளது..

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு கடந்த ஆண்டு 75 ஆயிரம் கோடி ஒதுக்கீடு .இந்ததிட்டம் மூலம் கடந்த காலபணிகளுக்கு 25 ஆயிரம் கோடி நிலுவை உள்ளது.இந்த நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 73 ஆயிரம் கோடியில் முன் செலவுத் தொகை 25,000 கோடி போக ரூ48,000 கோடி மட்டுமே நடப்பாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மிக மிக குறைவாகும்.

விவசாய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது என்ற கோரிக்கை ஒரு புறம், மறுபுறம் விவசாய பணிகளுக்கு தொழிலாளர்கள் கிடைக்கவில்லை என்ற கோரிக்கை.இதை சமன் செய்திடவிவசாய பணிகளில் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை அமல்படுத்திட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொண்டு கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்து இந்த திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியது பற்றி அரசுக்கு அக்கறையில்லை. ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடியின் நண்பர்களில் முதன்மை நபரான கௌதம் அதானி உலக பணக்காரர்கள் பட்டியலில் 2018ல் 75 வது இடத்தில் இருந்தவர் தற்போது 10வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். 8வது இடத்தில் இருந்த முகேஸ்அம்பானி 11வதுஇடம் சென்றுள்ளார்.

2018ஆம் ஆண்டு முகேஷ் அம்பானி சொத்து 125000 கோடி ரூபாயாக இருந்தது தற்பொழுது 669000 கோடியாக உயர்ந்துள்ளது. அதானியின் சொத்து மதிப்பு அப்பொழுது 35000 கோடி ரூபாயாக இருந்தது தற்பொழுது 683000 கோடி ரூபாய் என 1950 சதம் பல மடங்காக பெருகி உள்ளது. இந்த சூழலில் நிதியமைச்சர் பெரு முதலாளிகளுக்கு 18 சதமாக இருந்த வரிகளை 15 சதமாக குறைத்து அவர்கள் துயரத்தைதுடைத்துள்ளார். ஆனால் இயற்கை பாதிப்பால் கடன் சுமையில் தற்கொலைகளுக்கு உள்ளாகும்விவசாயிகளின் கடன்களை மட்டும் தள்ளுபடி செய்வதற்கு இவர்களுக்கு மனம் வரவில்லை. அதே நேரத்தில் உலகளாவிய பட்டினி குறியீடு என் 2020இல் 116 நாடுகளில் இந்தியா 101 ஆவது இடத்தில் உள்ளது. இதைப்பற்றி எல்லாம் ஒன்றிய அரசுக்கு அக்கறையும் இல்லை; ஆர்வமும் இல்லை. இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# இசை உலகின் முடிசூடா மகாராணி லதா மங்கேஷ்கர் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

நாட்டின் பெருமைக்குரிய இசைப் பறவை லதா மங்கேஷ்கர் பிப். 06 அன்று மும்பை மருத்துவமனையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையுற்றோம்..

நாட்டுப்புற இசைக் குடும்பத்தில் பிறந்த லதா மங்கேஷ்கர் பதிமூன்று வயதில் இசைப் பயணத்தை தொடங்கியவர். எழுபது ஆண்டுகளில் லதா மங்கேஷ்கர் பல்லாயிரம் பாடல்களை பாடியுள்ளார். பல்வேறு மொழி பேசும் மக்களின் இதயங்களில் சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொண்ட இன்னிசை ராணியாக திகழ்ந்தவர். செம்மொழியாம் தமிழ் உட்பட முப்பத்தாறு மொழிகளில் அவரது காந்த சக்தி வாய்ந்த குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

திரை உலகில் தனக்கென பல முத்திரைகளை பதித்துள்ளவர். பாரத் ரத்னா, தாதா சாகேப் பால்கே ஆகிய உயர்ந்த பட்ச விருதுகள் உட்பட நூற்றுக்கணக்கான விருதுகளை வென்று சாதனை படைத்தவர். நாட்டின் எல்லை கடந்து உலகம் முழுவதும் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்து வாழ்பவர். பல நாடுகளும் இவருக்கு விருது கொடுத்து பெருமை பெற்றுள்ளன.

கோவிட் 19 என்ற நோய்த்தொற்று இசை உலகில் சிறகடித்து பறந்து கொண்டிருந்த புகழார்ந்த பறவையின் உயிரைப் பறித்துக் கொண்டது. ஆனாலும் அவரது பாடல்களிலும் இசையிலும் அவர் மரணத்தை வென்று வாழ்ந்திருப்பார். அவரது மறைவால் நாடு பெருமைக்குரிய இசை மகளை இழந்து நிற்கிறது. லதா மங்கேஷ்கர் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த அஞ்சலி தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்தாருக்கும், இசை உலக ரசிகர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## வாக்கு சேகரிப்பு



வெண்ணந்துூர் பேரூராட்சி 13 ஆவது வார்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பி.ஜெயபால் அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னத் தில் வாக்கு கேட்டு தேர்தல் பிரச்சாரம் செய்தோம்.

## தஞ்சையில் வாக்கு சேகரிப்பு

தஞ்சாவூர் மாநகராட்சி 15வது வார்டு வேட்பாளர் கே.கல்யாணி அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னத்திற்கு வாக்கு கேட்டு வீடு வீடாக வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. திமுக முன்னாள் மாநகர துணை செயலாளர் மோகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி.சந்திரகுமார், ஆர்.பி.முத்துக்குமரன், வெ.சேவையா, ஆறுமுகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சிறுகுடிசைகளில் வசித்து வரும் கோனார் தோட்டப் பகுதி மக்களுக்கு இந்தப் பகுதியிலேயே அடுக்குமாடி குடியிருப்பு கட்டித்தர முயற்சி மேற்கொள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உறுதி அளிக்கப்பட்டது.



## சி.எஸ். மார்க்சிய பயிலரங்க கட்டிட நிதி

திருநெல்வேலி,தூத்துக்குடி, தென்காசி மூன்று மாவட்டங்கள் இணைந்து நடத்திய கட்சி பேரவையின் போது சி.எஸ் சுப்பிரமணியம் கட்சி கல்வி கட்டிட நிதியாக ரூ. 5000 முன்னாள் தொலைத்தொடர்பு ஊழியர் கணபதிராமன் அவர்கள் நெல்லை மாவட்டத்தின் சார்பில் மாநிலச் செயலாளர் முத்தரசன் அவர்களிடம் வழங்கினார்கள். உடன் மாவட்டச் செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் ஆர்.சடையப்பன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஏ.முத்துக்கிருஷ்ணன்

### ந.நஞ்சப்பன் உடல்நிலை குறித்து

# இரா.முத்தரசன் நேரில் நலம் விசாரிப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ந.நஞ்சப்பன் உடல்நிலை குறித்து நேரில் சென்று நலம் விசாரித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் திடீரென உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு தருமபுரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் இதனையறிந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தருமபுரிக்கு வருகை தந்தார். பின்னர் மருத்துவமனைக்கு சென்று ந.நஞ்சப்பன் அவர்களிடம் நேரில் நலம் விசாரித்தார்.

பின்னர் சிகிச்சை அளிக்கும் மருத்து வரிடம் அவருக்குள்ள பாதிப்புகள் மற்றும் அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டு அவருக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்க கேட்டு கொண்டார். அப்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டச் செயலாளர் கே.மோகன்,தருமபுரி மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன்,மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சின்னசாமி, ஏ.மாது, ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் சிறப்பு தலைவர் இரவீந்திரபாரதி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 58. உலகிலுயர உரை

**உலகில் உயர உபாயம் உரைப்பேன்**
**உலகில்நீ ஒன்றுமற் நோய்ந்து.**

உலக மக்களுடன் கூட்டுறவு கொண்டு வாழ்க. ஏனெனில் அதுதான் உயர்வான வாழ்வு. இதுவே நான் உங்களுக்குச் சொல்லும் நெறிமுறையாகும்.

**தாழ்ந்த இடம்தண்ணீர் தங்குமெங்கும் தாழ்ந்தேந்த**
**தங்குமிங்கும் மக்க ளுளம்.**

தண்ணீரின் இயல்பு பள்ளத்தை நோக்கி ஓடி, குழிவான இடத்தில் தேங்குவதாகும். இதைப்போலவே, யார் தாழ்ந்து, பணிந்து செயல்படுகிறார்களோ அவர்கள் பால் மக்கள் உள்ளம் சென்று தங்கும்.

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

கலெக்டர் ஏன் மேக்கப் போவில்லை என்ற தலைப்பில் மலப்புரம் மாவட்ட ஆட்சியர் ஸ்ரீமதி ராணி சோயாமோய் கல்லூரி மாணவர்களிடையேயான உரையாடல் சிறப்பாக அமைந்தது;

உள்ளத்தை உருக்கியது.

**– ராமன்,**
இராயபுரம் சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

தமிழ்நாட்டில் வகுப்புவாத சக்திகளுக்கு இடமில்லை என்பதை நடந்து முடிந்த நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் ஊராக உள்ளாட்சித் தேர்தகல்கள் வெளிப்படுத்திக் காட்டின. அதே போன்று தற்போது நடக்கும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலும் இதை மெய்ப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதை அரசியல் ரீதியாக இரா.முத்தரசன் அவர்களின் கட்சிக் கடிதம் விளக்கிக் காட்டுகிறது.

**– சிவனேசன்**, மன்னார்குடி

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை 2022 –23 மிகவும் பேரழிவுகரமானது என்று பொதுச் செயலாளர் ராஜா அவர்களின் அறிக்கை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது.

தமிழ்நாடு பெண்களுக்கான புதிய கொள்கை வரைவு மீதான இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் கருத்துக்களும், ஆலோசனைகளும் அதை மேலும் செழுமைப்படுத்துகிறது.

**– கோ.சுந்தரி,**
கோவை

**ஆசிரியர் ஜனசக்தி,**

பட்ஜெட்டில் ஏழைகளுக்கு குறைந்த பட்ச வருமானம் கிடைக்க உத்தரவாதம் செய்ய வேண்டும்.

பெரும் பணக்காரர்கள் மீது சமத்துவமின்மை வரி விதிக்க வேண்டும் என்ற நியாயத்தை நித்யா சக்கரவர்த்தியின் கட்டுரை விளக்குகிறது.

**– ஆதிநாராயணன்,**
வள்ளியூர்

## வேட்பு மனு தாக்கல்



### பரமக்குடி நகர்மன்ற உறுப்பினர்

பரமக்குடி நகராட்சியில் 10 வது வார்டில் என்.எஸ்.பெருமாள், 15 வது வார்டில் டாக். எஸ்.வரதராஜன் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். ஏஐடியூசி மாவட்ட செயலாளர் என்.கே. ராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ். பி.ராதா, பரமக்குடி நகராட்சியின் மேனாள் தலைவர் ராசி என்.போஸ் ஆகியோர் வேட்பாளர்களை முன்மொழிந்தனர். இந்த நிகழ்ச்சியில் திமுக, காங்கிரஸ், சிபிஎம் உள்ளிட்ட தோழமை கட்சியினர் கலந்து கொண்டனர்.



### திருச்சி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்23ல் திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளருமான க.சுரேஷ்குமார் மனு தாக்கல் செய்தார்.



### ஆண்டிபட்டியில் பேரூராட்சி

ஆண்டிபட்டி பேரூராட்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 10வது வார்டில் மீனாட்சி முனீஸ்வரன் வேட்பு மனு தாக்கல் செய்தார். நிகழ்வில் ஆண்டிபட்டி சட்டமன்றத் உறுப்பினர் ஆ.மகாராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஏ.வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி., திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ராஜாராம், சிபிஐ ஒன்றிய செயலாளர் பிச்சைமணி ஆகியோர் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.



### பேரணாம்பட்டு நகர் மன்ற உறுப்பினர்

பேரணாம்பட்டு நகர்மன்ற தேர்தலில் இரண்டாவது வார்டு கவுன்சிலர் பதவிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகர செயலாளர் ஜி.எஸ்.மூர்த்தி பிப். 04 வேட்பு மனு தாக்கல் செய்தார். இதில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் நா.சே.தலித்பாஸ்கர் மற்றும் ஜி.எஸ்.எம்.முரளி ஆகியோர் கலந்து கொண்டார்.



### மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சி 26வது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிடும் க.முத்துகுமதி தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

# சிபிஐ வேட்பாளருக்கு அமைச்சர் கே.என்.நேரு வாக்கு சேகரிப்பு



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திருச்சி மாநகராட்சி 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் க. சுரேஷ்குமார் அவர்களை அறிமுகப்படுத்தியும் கதிர் அரிவாள் சின்னத்திற்கு வாக்களிக்க கோரியும் பிப்.6 அன்று உறையூரில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு திமுக முதன்மைச் செயலாளரும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று உரையாற்றி வாக்கு சேகரித்தார். தேர்தல் பணிக்குழு கன்வீனர் சிவசூரியன் தலைமை வகித்தார். பகுதிச் செயலாளர் பால முரளி வரவேற்புரையாற்றினார். திமுக வட்ட செயலாளர்கள் ரவி, கோவிந்தராஜன், சிபிஐ வட்டச் செயலாளர் முருகன் முன்னிலை வகித்தனர்.

திமுக மத்திய மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வைரமணி, மாநகர செயலாளர் மு. அன்பழகன், பகுதி செயலாளர் கண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர் மாவட்ட செயலாளர் திராவிடமணி, முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் செல்வராஜ், மதிமுக மாவட்டச் செயலாளர் வெல்லமண்டி சோமு, மார்க்சிஸ்ட் கட்சி நிர்வாகி பிரகாஷ், காங்கிரஸ் கட்சி பகுதி செயலாளர் ராஜ்மோகன், விடுதலை சிறுத்தைகள் தமிழா தன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் நடராஜா, மாதர் சம்மேளனம் ஆயிஷா, வை.புஷ்பம் எக்ஸ்.எம்.சி. மாணவர் பெருமன்றம் இப்ராஹிம் தொலைபேசி தொழிற்சங்கத் தலைவர் காமராஜ் உள்ளிட்டோரும் உரையாற்றினர். காந்திபுரம் சண்முகம் நன்றி கூறினார்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து

# அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பிரச்சாரம்



கோவை மாநகராட்சி 53 வது வார்டு உறுப்பினர் பதவிக்கு திமுக தலைமையிலான முற்போக்கு கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் எம்.டி.மோகன் போட்டியிடுகிறார்.

அவரை ஆதரித்து மாண்புமிகு மின்சாரம், கலால் மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி மசக்காளிபாளையம், இந்திரா காலனி பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது திமுகவின் மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ந. கார்த்திக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் வி. எஸ். சுந்தரம் மற்றும் வேட்பாளர் மோகன் ஆகியோர் அருகில் இருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஆர். தேவராஜ், பொருளாளர் யு.கே. சுப்பிரமணியன், கிழக்கு மண்டல செயலாளர் மு.வ. கல்யாணசுந்தரம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

# இலங்கை மற்றும் ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

### ஏஐடியூசி மீனவத் தொழிலாளர் சங்கம் முடிவு

ஏஐடியூசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.சின்னத்தம்பி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் கடல் வளத்தை நம்பி மீன்பிடி மற்றும் அதனைச் சார்ந்த தொழில் புரியும் மீனவ தொழிலாளர்கள் சுமார் 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

தமிழக மீனவர்கள் எல்லை யைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை அரசு சிங்கள ராணுவ கப்பற்படையினரால் மீனவர்களை சிறை பிடித்தும் தாக்கப் பட்டும், சித்திரவதைக்கு உள்ளாக்கி திட்டமிட்டு படுகொலை செய்யப்படுவதும், சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீன்பிடி படகுகளை இலங்கை அரசு ஏலம் விடுவதும், அதோடு மட்டுமல்லாமல் இலங்கை கடற்கொள்ளையர்களால் தமிழக மீனவர்களை கடுமையான ஆயதங்களைக் கொண்டு தாக்கப் பட்டு மீன்கள், மீன்பிடி வளைகள் மற்றும் மீன்பிடி உபகரங்களை கொள்ளையடித்து செல்வதும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால் அரசிற்கு வருமான இழப்பு ஏற்படுகிறது.

ஆண்டிற்கு ரூ.60 ஆயிரம் கோடி அரசிற்கு அன்னிய செலவானியை ஈட்டிக்கொடுக்கும் மீன்பிடித் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக அழிய தொடங்குகிறது. தாங்களுடைய வாழ்வும், வாழ்வாதாரமும் பறிப்போய் விடுமோ என நம்பிக்கையை இழந்து நிற்கும் மீன்வர்களையும், மீன்பிடி தொழிலையும் பாதுகாக்க தவறிய இலங்கை மற்றும் ஒன்றிய அரசை கண்டித்து உப்பு சத்தியாகிரகத்திற்கு புகழ்பெற்ற இடமான நாகை மாவட்டம், கோடியக்கரை வேதாரண்யத்தில் மாபெரும் தொடர் உண்ணாவிரம் விரைவில் நடைபெறவுள்ளது. அனைத்து தொழிற்சங்கங்களும் சாதி, மத அரசியல் கடந்து போராதரவு தர வேண்டுமென பணிவுடன் வேண்டுகிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# “பத்மஸ்ரீ” விருது பெற்றுள்ள கவிஞர் சிற்பிக்கு பாராட்டு

தமிழ்க்கவிதை வரலாற்றில் புதுக் கவிதை வடிவத்திற்கு எழுச்சியூட்டி, ஒரு இடதுசாரி பார்வையை உருவாக்கியது “வானம்பாடி” கவிதை இயக்கம். அதன் மூலவர்களுள் ஒருவராக விளங்கியவர் கவிஞர் சிற்பி. மரபிற்கும் புதுமைக்கும் பாலமாக கவிதைத்துறையில் ஏராளமான கவிதைகளைப் படைத்தவர்.

அவரது “ஒரு கிராமத்து நதி” சாகித்ய அகாதமி விருது பெற்றது. மொழி பெயர்ப்பிற்காகவும் கவிஞர் சிற்பி சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ளார்.

சாகித்ய அகாதமியின் தென் மண்டல ஒருங்கிணைப்பாளராக இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்டு தமிழ் இலக்கிய உலகிற்கு நற்பணியாற்றி வருபவர்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து அதனுடன் பயணித்து வருபவர் கவிஞர் சிற்பி. பெருமன்றத்தின் தலைமைக்குழு உறுப்பினர்.

இஸ்கஸ், இஸ்கஃப் இயக்கத் துடனும் தொடர்ந்து செயலாற்றி வருபவர். கவிஞர் சிற்பி அவர்களுக்கு “பத்மஸ்ரீ” விருது அறிவிக்கப் பட்டுள்ளதற்கு இவ்விரு அமைப்புகளின் சார்பில் இஸ்கஃப் மாநில பொதுச்செயலாளர் எஸ். ராதா கிருஷ்ணன், கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி, இஸ்கஃப் மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் ஆகியோர் கவிஞரை பொள்ளாச்சியில் சந்தித்து சிறப்பு செய்தனர்.

# அதிகாலையில் வேலைக்கு வர தொழிலாளர்களுக்கு நிர்பந்தம்

### வி.தொ.ச. கண்டனம்

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியத்தில் நூறு நாள் வேலைத் தொழிலாளர்களை காலை 7:30 மணிக்கு வேலைக்கு வர வேண்டுமென ஒன்றிய நிர்வாகம் அடாவடி என தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தில் தொழிலாளர்கள் முறை யீடு செய்தனர். இதுகுறித்து சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலர் குல சேகரன் அவர்களை தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட செயலாளர் என். எஸ்.பிரதாப் சந்திரன், ஞாயிறு என்.கே. தாஸ் ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர். பழையபடி காலை 9 மணிக்கு வேலைக்கு வரும் தொழிலாளர்களை அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.



## ராமன் படத் திறப்பு நிகழ்ச்சி: இரா.முத்தரசன் பங்கேற்பு

தருமபுரி மாவட்ட ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவராக செயல்பட்டு வந்த மறைந்த ராமன் படத் திறப்பு நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா. முத்தரசன் பங்கேற்று அன்னாரின் உருவ படத்தை திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்ட ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்டக்குழு கூட்டம் தருமபுரியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் எம்.வி.குழந்தைவேலு தலைமை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆர்.ராமன் உருவப்படத்தை திறந்து வைத்து பேசினார். நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டச் செயலாளர் கே.மோகன், இச்சங்கத்தின் மாநில துணை பொது செயலாளர் கோவை செல்வராஜ், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட பொது செயலாளர் கே.மணி, கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.சுதர்சனன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிட்லபாக்கத்தில் 60 ஆண்டுகளாக வசிக்கும்

## ஏழைகளுக்கு குடியிருப்பு பட்டா வழங்க வருவாய்த்துறை அமைச்சரிடம் மனு

செங்கல்பட்டு மாவட்டம், சிட்லபாக்கம் ஊராட்சியில் பெரியார் தெரு, ஆனந்த நகர் பகுதிகளில் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஏழை எளிய மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் வீட்டுமனை பட்ட கேட்டு பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இந்நிலையில் அதிகாரிகள நீதிமன்ற உத்தரவு எனக்கூறி அவ்வீடுகளை இடிக்க வந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் சிபிஐ மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்களை சந்தித்து முறையிட்டனர்.

தலைவர் இரா.நல்லகண்ணு முதல்வருக்கும், வருவாய்த்துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதினார். அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு விருதுநகர் வந்த தவொஇ மாநில செயலாளர் எஸ்.கே.சிவா, போராட்டக்குழு தாமரை செந்தில்குமார் ஆகியோர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பி.லிங்கம் எக்ஸ் எம்பி, எஸ்.பழனிக்குமார் ஆகியோரை சந்தித்தனர். வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் அவர்களை தொடர்பு கொண்டு பேசினர்.

அதனடிப்படையில் அமைச்சரை நேரில் சந்தித்து தலைவர் இரா. நல்லகண்ணு எழுதிய கடிதத்தை கொடுத்தனர்.

கடிதத்தை படித்துப் பார்த்த வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் இராமச் சந்திரன் “ தலைவர் ஐயா தன்னிடம் கைபேசியில் பேசியதாகவும், உரிய நடவடிக்கை எடுப்பதாகவும்” உறுதியளித்தார்

## மறைந்த லதா மங்கேஸ்கருக்கு வியாசர்பாடியில் புகழஞ்சலி

இந்திய இசைத்துறையின் இசை ராணி, இசைக்குயில் என வர்ணிக்கப்படும் லதா மங்கேஸ்கர் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், வடசென்னை மாவட்டக்குழு உறுப்பினர் லி.உயதகுமார் தலைமையில் பிப்.8 அன்று டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் புகழஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. பெரம்பூர் தொகுதிச் செயலாளர் ஆ.சுப்பிரமணி மலர் மாலை அணிவித்து அஞ்சலி உரையாற்றினார். துணைச் செயலாளர் அருள், 46வட்ட கிளைச் செயலாளர்கள் என்.மூர்த்தி, ஆர்.பார்த்திபன், எஸ். விக்ரம், த.ஒ.வா.இ. பெரம்பூர் தொகுதிச் செயலாளர் தில் குமார், முன்னணி தோழர்கள் ச.கோவிந்தன், ச.பிரபு, ஆட்டோ முருகேசன் மற்றும் வர்க்க, வெகுஜன இயக்க முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

## வீரப்பூரில் பேருந்து நிலையம் அமைக்க வலியுறுத்தி

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

மணப்பாறை தாலுகா, வையம்பட்டி ஒன்றியம், அணியாப்பூர் ஊராட்சியில் உள்ள சந்தப்பேட்டை கடைவீதியில் வீரப்பூரில் பேருந்து நிலையம் அமைக்க வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய குழு உறுப்பினர் பழனிச்சாமி தலைமை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட துணை செயலாளர் சுப்பிரமணியன், புறநகர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன், வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்தி உரை நிகழ்த்தினர்.

ஒன்றிய துணை செயலாளர் தங்க ராஜ், ஸ்டீபன், சேகர், பொருளாளர் செலின்மீமா ரோஸி மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் உட்பட கட்சியின் நிர்வாகிகளும், தோழர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டு பேருந்து நிலையம் அமைக்கும் கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

## அரசு உத்தரவாதத்தை ஏற்று ஆற்றில் இறங்கும் போராட்டம் ஒத்திவைப்பு



திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம் ஞாயிறு – வன்னிப்பாக்கம் கிராமங்களுக்கு இடையே உள்ள கொசஸ்தலை ஆற்றில் மேம்பாலம் அமைக்க அரசு உத்தரவிட்டது. அதற்கு மாறாக சோழவரம் ஊராட்சி ஒன்றியக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைக் கண்டித்தும் அதே ஞாயிறு – வன்னிப்பாக்கம் இடையே மேம்பாலம் கட்டக் கோரியும் பிப். 11ல் போராட்டம் நடத்த தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கமும், போராட்டக்குழுவும் முடிவெடுத்தது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் உத்தரவுக்கிணங்க பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவாத்தையில் வருவாய் கோட்டாட்சியர் செல்வம், வட்டாட்சியர் ரஜினிகாந்த், சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி, மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர், ஞாயிறு வருவாய் ஆய்வாளர், ஞாயிறு, வன்னிப்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர்கள், பொதுப்பணித் துறை அலுவலர்கள், சோழவரம், மீஞ்சூர் காவல் ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

போராட்டக் குழுவினர் சார்பில் விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், வன்னி பக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மஞ்சுளா பஞ்சாட்சரம், அருமந்தை ஊராட்சி மன்ற தலைவர் சி.விக்ரமன், மாபுஸ்கான்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம், ஞாயிறு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கே. ஜனார்த்தனன், திருநிலை ஊராட்சி மன்ற தலைவர் சிவக்குமார், கிராம பெரியவர்கள் ஆர்.வேணுகோபால், கண்ணியம் பாளையம் முனுசாமி, ஞாயிறு என்.ஆர்.பாலாஜி, என்.கே.தாஸ், ஞாயிறு ஊராட்சி மன்ற உறுப்பினர் கே.சதீஷ், புதுக்குப்பம் சேஷாத்ரி, அட்டப் பாளையம் ஸ்ரீராமுலு, ஞாயிறு ஆனந்தராஜ், செல்வகுமார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பங்கேற்றனர்.

ஞாயிறு – வன்னிப்பாக்கம் கிராமங்களை இணைக்கும் வகையில் கொசஸ்தலை ஆற்றில் மேம்பாலம் அமைக்க, உரிய அரசுத் துறைக்கு கூட்ட நடவடிக்கை விவரத்தினை கடிதம் வாயிலாக தெரிவிக்கப்படும் என்பதையும், மேலும் பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர், உதவி செயற் பொறியாளர் நெடுஞ்சாலைதுறை, உதவி செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, வட்டார வளர்ச்சி அலுவலர் சோழவரம் மற்றும் மீஞ்சூர் ஆகியோருடன் கலந்து பேசியதில், பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஞாயிறு – வன்னிப்பாக்கம் இடையில் மேம்பாலம் அமைக்க மண் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு பாலம் அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் கூட்டத்தில் உறுதியளித்துள்ளார்.

இந்த உத்தரவாதத்தை ஏற்று ஆற்றில் இறங்கும் போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. அரசு அலுவலர்களும் பொதுமக்களும் கையொப்பமிட்ட கடிதம் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

## வேட்பு மனு தாக்கல்



### ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சி 11வது வார்டு உறுப்பினர் பதவிக்கு மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக எஸ்.டி.பிரபாகரன் தனது வேட்புமனுவை ஈரோடு வீரப்பன் சத்திரம் மண்டல அலுவலகத்தில் உதவி தேர்தல் அலுவலரிடம் தாக்கல் செய்தார். இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன், கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி, ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.பொன்னுசாமி, ஈரோடு வட்டாரச் செயலாளர் டி.சோமசுந்தரம், வட்டாரப் பொருளாளர் என்.ரமணி உள்ளிட்டோர் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். முன்னதாக பேரறிஞர் அண்ணா சிலைக்கு வேட்பாளர் எஸ்.டி.பிரபாகரன் மாலை அணிவித்தார்.



### பெருந்துறை பேரூராட்சி

பெருந்துறை பேரூராட்சி 12வது வார்டு உறுப்பினர் பதவிக்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக ஆர்.பானுமதி ராஜகோபால் பெருந்துறை பேரூராட்சி அலுவலகத்தில் உதவி தேர்தல் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.



### இடைக்கழிநாடு பேரூராட்சி

செங்கல்பட்டு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி 15வாட்டில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் வேட்பாளராக இரா.உஷாராணிரவி வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் திமுக பேரூர் செயலாளர் எஸ்.இனியரசு மதிமுக.அவைத்தலைவர் எஸ்.ஆர்.நடராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்யூர் தொகுதி செயலாளர் கே.இரவி, இளைஞர் பெருமன்ற காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் கேவி.சேகுவேராதாஸ், மதிமுக செயலாளர் பி.மனோகரன், திமுக வார்டு துணை செயலாளர் கேபி.மூர்த்தி மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.



### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கொடியேற்றும் நிகழ்ச்சி

## கட்சியில் இணையும் விழா

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோவில் ஒன்றியம், கூடலூர் ஊராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணையும் விழா மற்றும் கொடியேற்றும் நிகழ்ச்சி ஒன்றியக்குழு உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கட்சியின் ஒன்றிய செயலாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக்குழு உறுப்பினர் ஜெ.வேதநாயகம், ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தவசிமுத்து, பாக்கியராஜ், ராதாகிருஷ்ணன், சின்னதுரை, இளைஞர் பெருமன்றம் ஒன்றிய செயலாளர் கோபிநாத், செல்வம் பகத்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர். மாதர் சங்கத்தில் பெண் தோழர் புவனேஸ்வரி இணைந்துள்ளார். கட்சியின் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் கட்சியில் இணைந்த தோழர்களை வரவேற்று வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

## டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் சுருக்கமான வாழ்க்கை வரலாறு

ராமநாதபுரத்தில் ஒரு எளிய மீனவ குடும்பத்தில் பிறந்து. தாய்மொழி வழிக் கல்வியில் தமிழில் பயின்று உலகம் வியக்கும் விஞ்ஞானியாக வளர்ந்த டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாற்று நூல் இது.

அப்துல் கலாம் அவர்கள் ஒரு விஞ்ஞானி, பொறியாளர் என்பதற்கும் மேலாக தொலைநோக்கு பார்வையுடன்,எதிர்காலத்தின் மேல் நம்பிக்கைக் கொண்டிருந்தார். இதனால்தான் மாணவர்களை சந்திப்பதிலும், உரையாடுவதிலும் அலாதி ஆர்வம் கொண்டிருந்தார். இந்திய அரசின் அறிவியல் ஆலோசகராகவும், டிஆர்டிஓ வில் அவர் செய்த அளப்பரிய சாதனைகளையும் கருத்தில் கொண்டு 1997ஆம் ஆண்டு ‘‘பாரத ரத்னா’’ என்ற உயரிய விருது இந்திய அரசால் அவருக்கு அளிக்கப்பட்டது.




அவர் இந்தியாவின் அறிவியல் மனிதர் மற்றும் ஏவுகணை மனிதர் என சிறப்பாக அறியப்பட்டார். ஏவுகணை தொழில்நுட்பத்தில் உலகத்தின் கவனத்தை ஈர்த்த இவர் காலத்தில்தான் தரை இலக்கை தாக்கக் கூடிய ‘‘பிரித்திவி’’ ஆயுதம் கொண்டு சென்று தாக்கவல்ல ‘திரிசூல்’. தரையிலிருந்து வானில் உள்ள இலக்கை தாக்கக்கூடிய ‘ஆகாஷ்’ டாங்கிகளை தக்க தாக்க வல்ல ‘நாக்‘ போன்ற ஏவுகணைகள் உருவாக்கப்பட்டன.

கலாமின் நீண்ட நாள் கனவான ரெக்ஸ் (rex) எனப்படும் ஏவுகணை செலுத்தும் வாகனம் ‘அக்னி’ கலாம் அவர்களால் பெயரிட்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவை வல்லரசாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வை கொண்டவர்.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக பணியாற்றியவர். குடியரசுத் தலைவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின் தனது நேரத்தை மாணவர்களுடன் உரையாடுவதில் பெரும் விருப்பம் கொண்டிருந்தார். இதற்காக நாடு முழுவதும் பணயம் செய்தார்.

கலாம் அவர்கள் 2015 ஜூலை 27ம் நாள் மாலை வேளையில் மேகாலயா மாநிலத் தலைநகரான ஷில்லாங்கில். இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் மாணவர்களிடையே உரையாற்றிக் கொண்டிருந்தபோது மயங்கி விழுந்தார்.

எந்த மாணவர்களை அதிகம் நேசித்தாரோ, அந்த மாணவர்களிடத்தில் உரையாற்றும்போதே அவர் உயிரும் பிரிந்தது. மகத்தான மாமனிதரான கலாம் அவர்களின் வாழ்க்கை சுருக்கத்தை பொறியாளர் பீ.ஜி.ரமேஷ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுத, அதை யூசுப்ராஜா தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இது சிறிய நூல் என்றாலும், கலாமை அறிந்து கொள்ள உதவும் நூல் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : பீ.ஜி. ரமேஷ்
வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்,142. ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14, செல்: 044 28482441
பக்கங்கள் : 66 விலை : ரூ.60


## நூல் நயம்

### அழகும் ஆரோக்கியமும்

அழகும் ஆரோக்கியமும் என்கிற இந்த நூல்.’ சினிமா எக்ஸ்பிரஸ்’ மற்றும் ‘மல்லிகை மகள்‘ தமிழ் இதழ்களில் மருத்துவர் கு.சிவராமன் அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

நவீன விஞ்ஞானமும்,நவீன மருத்துவமும் பன்னாட்டு வணிக கம்பெனிகளின் பிடியில் மாட்டிக்கொண்டதால் .சரியான மருத்துவம் ஏழைகளுக்கு எட்டாக்கனியாகி வருகிறது. மத்தியதர குடும்பத்திற்கு தினசரி சவாலாகி விழிபிதுங்க வைக்கிறது. வீட்டிற்கு ஒரு ஆஸ்துமா, டயாபடிஸ்,வீதிக்கு ஒரு புற்று நோய் என நோய்களின் ஆதிக்கம் நம்மை சுற்றி பெருகி வருகிறது.

இதன் விளைவே பாரம்பரிய மருத்துவம் உலகெங்கும் மீண்டும் பரவத் தொடங்கி இருக்கிறது. அந்த தேடலின் விளைவே இந்த நூல். அழகு என்பது ஆரோக்கியத்துடன் தொடர்புடையது. எப்பொழுதும் நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகும் ஒரு மனிதனால் எவ்வாறு அழகாக இருந்துவிட முடியும்? ஒரு மனிதனின் அழகு என்பது அவன் ஆரோக்கியமாக இருக்கிறான் என்பதிலிருந்தே அதை நாம் புரிந்துகொள்ள முடியும்.




எனவே மனித குலம் தனது ஆரோக்கியத்தையும் அழகையும் மீட்டெடுக்க நமது பாரம்பரிய உணவு வகைகளை மீண்டும் நாம் தேடிச் செல்லவேண்டும். காய், கீரைகள், கனிகள் போன்றவற்றை நாம் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கீரையிலும், காய்களிலும், பழங்களிலும் பல்வேறு மருத்துவ குணங்களும் சத்துக்களும் நிரம்பியிருக்கின்றன. இவை மிக எளிதாகவும் மலிவாகவும் கிடைக்கின்றன. ஆனால் நாம் இவற்றைப் புறக்கணித்து. நமது தட்பவெப்ப சீதோசன நிலைக்கு ஒத்துவராத அந்நிய உணவுகளை தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம்.

இதுவே நமது மக்களின் உடலில் நோய் பெருகுவதற்கு காரணமாக மாறி விடுகிறது. இதனால் தான் உடல் ஒரு வணிகப் பொருளாக மாறி அந்நிய நிறுவனங்கள் மனித உடலை வைத்து மருத்துவ வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றன. எனவே நமது ஆரோக்கியத்தை மீட்டெடுத்து, அழகைத் திரும்பப் பெற நாம் நமது பாரம்பரியத்திற்கு திரும்ப வேண்டும் என்பதை மருத்துவர் கு.சிவராமன் எழுதிய அழகும் ஆரோக்கியம் என்ற இந்த நூல் வலியுறுத்துகிறது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்

– சமரன்

நூலாசிரியர் : மருத்துவர் கு.சிவராமன்
வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்
142,ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை – 14, செல்: 044 28482441
பக்கங்கள் : 106 விலை : ரூ.85

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

நியூயார்க் டைம்ஸ் செய்திக் குறிப்பு

# தடுப்பூசி விநியோகத்தில் நிலவும் சமத்துவமின்மை




இதுவரையில் உலகம் முழுவதிலும் சுமார் 10 பில்லியன் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக நியூயார்க் டைம்ஸ் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. இது அறிவியலின் வெற்றி ஆகும். ஆனால், இது உலகளாவிய கூட்டுப்பொறுப்புணர்வின் முழு தோல்வி ஆகும்.

பணக்கார நாடுகளில், 77 சதவிகித மக்களுக்கு குறைந்தபட்சம் ஒருமுறை (முதல் தவணை) தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், குறைந்த வருவாய் நாடுகளில், 10 சதவிகிதத்திற்கும் குறை வான மக்களுக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக ப்ராஜெக்ட் ஒன்று (www.our-worldindata.org) குறிப்பிட்டுள்ளது.

வடஅமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், அதிகரித்து வரும் ஒமிக்கிரான் தொற்றுப் பரவலை எதிர்கொண்டு மீண்டெழ அந்நாட்டு மக்களுக்கு பூஸ்டர்களையும் (கூடுதல் தடுப்பூசி மருந்து) செலுத்தி வருகின்றன. சில நாடுகள் நான்காவது முறை தடுப்பூசி செலுத்துவது குறித்தும் பரிசீலித்து வருகின்றன. உலகின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் , அவர்களில் பெரும்பான்மையோர் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இருப்பவர்கள், இப்போதும் முதல் தவணை தடுப்பூசிக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சொல்வதானால், அமெரிக்காவில் கூடுதல் தவணையாக,ஐந்து முறைகூட தடுப்பூசிசெலுத்தப்பட்டுள்ளது. இதன் எண்ணிக்கை சுமார் 85 மில்லியன் ஆகும். இந்த எண்ணிக்கையானது ஒப்பீட்டளவில், ஆப்பிரிக்காவின் மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடான நைஜீரியாவில் மக்களுக்குச் செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கையை விட அதிகம் ஆகும்.

உலகின் மொத்த மக்கள் தொகை சுமார் 7.9 பில்லியன் ஆகும். அரசாங்கங்களும், மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களும், அவற்றின் செல்வம் மற்றும் அனைத்து வளங்களையும் மின்னல் வேகத்தில் திரட்டி 10 பில்லியன் தடுப்பூசிகளைத் தயாரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி பார்த் தோமேயானால், உலக மாந்தர் அனை வருக்கும் குறைந்தபட்சம் முதல் தவணை தடுப்பூசி செலுத்தக்கூடிய சாத்தியம் நிரூபணம் ஆகிறது.

தடுப்பூசி விநியோகத்தில் நிலவும் சமத்துவமின்மை மட்டுமே பிரச்சனை இல்லை. பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் பலப்பிரச்சனைகள் உள்ளன. வருத்தமளிக்கக்கூடிய செய்தி எதுவென்றால், சில ஏழை நாடுகளில் மூன்றில் ஒரு சதவிகித மக்களுக்குக் கூட தடுப்பூசி செலுத்தப்படவில்லை.

தடுப்பூசிக்கு எதிரான இயக்கம் முன்னேறிய நாடுகளில் தொடருகிறது.

# கொரோனா உண்டாக்கி வரும் கற்றல் நெருக்கடி

கொரோனா பெருந்தொற்று காரணமாக சுமார் இரண்டாண்டு காலமாக பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் 31 மில்லியன் மாணவர்களின் வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த நெருக்கடியான போக்கை, ‘‘ஒரு உலகளாவிய கற்றல் நெருக்கடி’’ என்று ஐ.நா சபை பொதுச் செயலாளர் ஆண்டோனியோ குட்டரெஸ் குறிப்பிட்டுள்ளார்.

நாம் செயல்படவில்லை என்றால், வளரும் நாடுகளில் பள்ளிகளில் இருந்து வெளியேறும் குழந்தைகள் எண் ணிக்கை 53 சதவிகிதத்தில் இருந்து 70 சதவிகிதமாக அதிகரிக்கும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலக அளவில் கல்வித்துறையில் கொரோனா உண்டாக்கிய குழப்பம், பெருந்தொற்று உச்சகட்டத்தில் இருந்த போது, பள்ளி மற்றும் கல்லூரியைச் சார்ந்த சுமார் 1.6 பில்லியன் மாணவர்களின் படிப்புக்கு தடங்கல் ஏற்பட்டது. தற்போது நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் இருப்பினும், நெருக்கடி காலம் இன்னும் முடியவில்லை என்று கூறிய அவர், கொரோனா பெருந்தொற்று உண்டாக்கியுள்ள இந்த நெருக்கடி கல்வித்துறையில் நிலவும் சமத்துவமின்மை மற்றும் அணுகல் பிரச்னைகளைக் கடந்து தீவிரமடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டுக்கான பேசுபொருள் கல்விமுறையை மாற்றியமைப்பது என்பதாகும்.

ஐ. நா. சபை வெளியிட்ட பிரசுரம் ஒன்றில், கொரோனா தொடர்பான சிக்கல்கள் காரணமாக, உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள் தங்கள் வாழ்நாள் வருவாயில் மொத்தமாக 17 ட்ரில்லியன் டாலர் இழப்புக்கு உள்ளாக நேரிடும் என்று கூறப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் சிக்கல்கள், நிச்சயமற்றதன்மை, பாது காப்பின்மை ஆகியவை நிலவி வரும் இன்றைய உலகில், கல்வியும் கற்றலும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருது மேலோங்கி வருகிறது.

யுனெஸ்கோ அமைப்பு வெளியிட்டுள்ள புதிய தரவுகளின்படி, 135 நாடுகளில் தற்போது பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன. 25 நாடுகளில் ஆண்டு இறுதி விடுமுறைகள் நீடிக்கப்பட்டுள்ளதால், பள்ளிக்கூடங்கள் தற்காலிகமாக இயங்காமல் உள்ளன. 12 நாடுகளில் பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு, இதே பருவ காலத்தில் பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு இருந்தன. 40க்கும் மேற்பட்ட நாடுகளில் தொலைதூரக் கல்விமுறை தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெருந்தொற்று காரணமாக, கல்வித்துறை தொடர்ந்து மிக மோசமாகப் பாதிப்புக்கு உள்ளாகி வருகிறது. அனைத்து நாடுகளிலும் உள்ள அரசாங்கங்கள் கல்வித்துறை மாற்றங்கள் குறித்து தீவிரமாக சிந்தித்து, செயல்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

# கனடாவில் கட்டாய தடுப்பூசிக்கு எதிராக லாரி ஓட்டுநர்களின் நூதன போராட்டம்

கனடாவில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத லாரி ஓட்டுநர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதனை எதிர்த்து அவர்கள் போராடத் தொடங்கினர். லாரி ஓட்டுநர்கள் நடத்தும் இந்தப் போராட்டம் ஒரு வாரத்திற்கும் மேலாகத் தொடர்ந்து வருகிறது.தலைநகர் ஓட்டவாவில் போராட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அமெரிக்காவில் கரோனா பாதிப்பு தீவிரம் அடைந்துள்ளதைத் தொடர்ந்து, கனடாவில் அதன் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க அந்நாட்டு அரசு கரோனா கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கியுள்ளது. லாரி ஓட்டுநர்களுக்கு தடுப்பூசி கட்டா யம் என்றும், தடுப்பூசி போடாதவர்கள் ஒரு வாரம் தனிமைப் படுத்தப்படுவர் என்றும் அரசு உத்தரவிட்டது.

இதனால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று அச்சம் தெரிவித்த லாரி ஓட்டுநர்கள், தலைநகர் ஒட்டாவாவுக்குள் லாரிகளுடன் நுழைந்து போராடப்போவதாக அறிவித்தனர். இதைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக, அரசு உயர் அதிகாரிகள் ஆலோசனையின் பேரில், பிரதமர் ஜஸ் டின் ட்ரூடோ தனது குடும்பத்துடன் ரகசிய இடத்துக்குச் சென்றுவிட்டார். ரகசிய இடத்திலிருந்து அரசின் வேலைகளை அவர் கவனித்து வருகிறார். இந்த நிலையில், ஒரு வாரத்துக்கும் மேலாக லாரி ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முக்கிய சாலைகளில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில், ஹாக்கி போன்ற விளையாட்டுகளில் லாரி ஓட்டுநர்கள் ஈடுவதால் பலரும் அவதிக்குள்ளாகி இருப்பதாக கனடா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போராட்டம் குறித்து கனடா துணை பிரதமர் கிறிஸ்டியா ஃபிரிலேண்ட் கூறும்போது, ‘‘கனடாவில் உள்ள இளைஞர்களை போல எனது குழந்தைகளும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். நாம் எதிர்பார்க்கும் கனடா இதுவல்ல’’ என்று வருத்தம் தெரிவித்திருக்கிறார்.



# தோழர் வீ.ராஜமோகன் ஒரு முழுமையான கம்யூனிஸ்ட்டாகவே வாழ்ந்து மறைந்திருக்கிறார்

## முதலாமாண்டு நினைவு தினத்தில் சி.மகேந்திரன் பேச்சு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட குழு மற்றும் ஆலந்தூர் தொகுதி குழு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீ. ராஜமோகனின் முதலாமாண்டு நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சியில், கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. மகேந்திரன், மாநில நிர்வாக குழு உறுப்பினர். த.லெனின், சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், எழுத்தாளரும் கவிஞருமான கே.ஜீவபாரதி, இதழாளர் இசைக் கும்மணி, ஐசிஎப் ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் டி.ராஜேந்திரன், தமிழ்நாடு பழங்குடிகள் சங்கத்தின் ஐ.உசேன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு பேசினர். காஞ்சி மாவட்ட குழு உறுப்பினர் ஜா.பூபாலன் தலைமையேற்று கூட்ட நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.

வீ.ராஜமோகனின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து சி.மகேந்திரன் பேசியதாவது: தோழர் ராஜமோகன் ஒரு முழுமையான கம்யூனிஸ்ட்டாகவே தன் வாழ்க்கையை வாழ்ந்து மறைந்திருக்கிறார். ராஜ்மோகன் போன்ற கம்யூனிஸ்டுகளின் வாழ்க்கை சமுதாய மாற்றத்திற்கானது; பொது நோக்கோடு கொண்ட செயல்பாடுகள் உடையது. ஒவ்வொரு கம்யூனிஸ்டுகளின் வாழ்க்கையில் இருந்தும் அவர்களின் செயல்பாடுகளை பாடமாக ஏற்றுக் கொள்வது என்பதுதான் முக்கியமானதாக இருக்கிறது.

1974 களில் நான் கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே, ராஜமோகன் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தலைவராக அறியப்பட்டு, அவரோடு கூடிய தொடர்பில் இணைந்து இருந்தேன். தோழர் இரா.நல்லகண்ணு வீ.ஆரின் குடும்ப மேன்மையை எடுத்துரைத்து, அவரது கட்சி செயல்பாட்டால் முழுநேர ஊழியராக வந்தவர் என்பதை தெரிவித்திருந்தது அவர்மேல் கூடுதல் மதிப்பை ஏற்படுத்தி இருந்தது. தோழர் வீ.ஆர். இயக்கச் செயல்பாடுகளை மேலெடுத்து வளர்த்தவர்.தொழிற்சங்கவாதியாக, கட்சி நிர்வாகியாக, ஜனசக்தி பத்திரிகையின் பொறுப்பாசிரியராக, வெகுஜன அமைப்புகளின் பங்களிப்பாளராக திறம்பட செயல்பட்டவர். அதற்காக அவர் எந்த சமயத்திலும் தன்னை உயர்த்திக் காட்டி கொண்டதில்லை. அதுபோல குடும்ப வாழ்வின் சுமைகள் குறித்து ஒருபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாத மேன்மையானவராகவே இருந்திட்டார்.

எந்த ஒரு அநியாயத்தையும் பார்க்க சகித்திடாமல் கொதித்து எழும் மனோ நிலையை உடைய கம்யூனிஸ்டுகளாகவே நம்மை செழுமைப்படுத்துகிறது. கம்யூனிஸ்ட் வாழ்க்கைக்கு இணையாக இன்னொரு வாழ்க்கை முறை இருக்க முடியாது. அத்தகைய கம்யூனிஸ்ட் வாழ்க்கையை நாம் எல்லோரும் உயர்வாக கருதிட வேண்டும். அத்தகையதான ஒரு வாழ்க்கை முறைக்கு நம்மையும், இனி வரும் தலைமுறைகளையும் அர்ப்பணித்துக் கொள்ள வைப்பதுதான் தோழர் ராஜமோகனுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும் என பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், ஜனசக்தி ஆசிரியர் குழு பொறுப்பாளருமான த.லெனின் பேசும்போது, மறைந்த தோழர் வீ.ராஜமோகன் தொழிற்சங்க பணிகளிலும் கட்சிப் பணிகளிலும் முறுக்கிய மீசையோடு அனைவரையும் ஈர்க்கக் கூடியவராகத் திகழ்ந்தார். வளத்தை எதிர்பார்க்காமல் வறுமை நிலையிலும் புன்முறுவலோடு செயல்பட்டார். 2009ல் இருந்து, ஜனசக்தி துணை ஆசிரியர் பொறுப்பில் கடைசி மூச்சு உள்ள வரை பணியாற்றினார். ஜனசக்தி பத்திரிகைக்கான பிழைத்திருத்தல் முதற்கொண்டு முழுமையான பணிகளை எல்லாம் ஆசிரியப் பணியில் இருந்துகொண்டே நிறைவேற்றி வந்தவர்.

கம்யூனிஸ்ட்களின் இறப்பு என்பது சமூகத்திற்கான படிப்பினையாக இருக்கிறது; காரல் மார்க்ஸ் மரணித்திடவில்லை; அவர் தனது சிந்தனையை நிறுத்திக் கொண்டார் என்றே பதிவிட வேண்டி இருக்கிறது. அதுபோலவே தோழர் ராஜமோகனின் நினைவைப் போற்ற வேண்டும் என பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளருமான டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் பேசியதாவது: தோழர் வீ.ராஜமோகன் அவர்களின் இழப்பு பேரிழப்பாகும், ஐம்பது, அறுபது ஆண்டுகால கட்சிப்பணி, தொழிற்சங்கப் பணி, பத்திரிகைப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தவர். கொரோனா கால கட்டத்தில் அவரை கவனமுடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தியும் அதனை பொருட்படுத்தாமல் பணி செய்வதையே பெரும் கடமையாகக் கொண்டிருந்தார்.

பத்திரிக்கை பணி, கட்சிப்பணி, வெகுஜன அரங்க பணி என எல்லாவற்றிலும் முழுமையாகவே செயல்பட்டார். அவரது குடும்ப சூழல், கண் பார்வை இழந்த மகன் என எல்லா சோகங்களையும் பின் மறைத்து முன்கள பணிகளிலேயே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். நோய் தொற்றினால் இழக்க நேரிட்ட அவரது இழப்பு பேரிழப்பாகும்.

அவர் நினைவைப் போற்றி கட்சியை பலப்படுத்துவதே அவருக்கு நாம் செலுத்தும் நல் அஞ்சலியாக இருக்கும் என பேசினார்.

16ம் பக்கத் தொடர்ச்சி

**54 பேரூராட்சிகளில் 97 வேட்பாளர்கள்**

**மொத்த வேட்பாளர்கள் 190**

| தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் | | |
|---|---|---|
| 29.திருபுவனம் | 2 | கோ.மணிமூர்த்தி |

| தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் | | |
|---|---|---|
| 30.உரத்தநாடு | 03 | வி.சி.சேகர் |
| 31.பேராவூரணி | 17 | வே.சார்லின் பிரபு |

| நாகப்பட்டினம் மாவட்டம் | | |
|---|---|---|
| 32.தலைஞாயிறு | 6 | இரா.சுலோச்சனா |
| 33.கீழ்வேளூர் | 14 | கே.அம்பிகா |

| கரூர் மாவட்டம் | | |
|---|---|---|
| 34.புலியூர் | 1 | கே.கலாராணி |

| திண்டுக்கல் மாவட்டம் | | |
|---|---|---|
| 35.வேடசந்தூர் | 4 | எம்.சந்திரசேகரன் |
| 36.ஆயக்குடி | 6 | ஜி.மலர் |

| புதுக்கோட்டை மாவட்டம் | | |
|---|---|---|
| 37.ஆலங்குடி | 7 | ஆர்.சொர்ணகுமார் |
| 38.கீரமங்களம் | 11 | டி.முத்தமிழ்செல்வி |
| 39.அன்னவாசல் | 9 | எம்.மீராமொய்தீன் |

| தேனி மாவட்டம் | | |
|---|---|---|
| 40.ஆண்டிபட்டி | 10 | எம்.மீனாட்சி |
| 41.தேவாரம் | 16 | க.ஆறுமுகம் |
| 42.மேல சொக்க நாதபுரம் | 6 | எஸ்.பஞ்சவர்ணம் |

| விருதுநகர் மாவட்டம் | | |
|---|---|---|
| 43. வத்திராயிருப்பு | 6 | பி.தவமணி |
| | 8 | எஸ்.ராஜேஸ்வரி |
| | 12 | எஸ்.கலைவாணி |
| | 15 | அ.பாண்டி |
| | 16 | கா.மகாலிங்கம் |
| | 17 | பி.கோபாலகிருஷ்ணன் |
| | 18 | என்.கோவிந்தன் |
| 44. சேத்தூர் | 4 | க.முருகேஸ்வரி |
| | 6 | ப.கனகரத்தினம் |
| | 13 | வ.பூமாரி |
| | 14 | கா.சரஸ்வதி |
| | 18 | க.கற்பகக்கனி |
| 45. சுந்தர பாண்டியபுரம் | 14 | வை.பால்ராஜ் |
| 46. எஸ். கொடிக்குளம் | 3 | ப.கல்யாணி |
| 47. W.புதுப்பட்டி | 14 | பெ.நல்லதம்பி |

| நெல்லை மாவட்டம் | | |
|---|---|---|
| 48. வள்ளியூர் | 7 | சி.வேம்பு சுப்பையா |
| | 8 | ஜி.சுப்ரமணியன் |
| | 15 | கே.மாரியம்மாள் |
| | 17 | கே.சந்தானமுத்து |
| 49. பணகுடி | 9 | என்.பன்னீர் செல்வம் |

| சிவகங்கை மாவட்டம் | | |
|---|---|---|
| 50.திருப்பத்தூர் | 17 | எஸ்.ராஜேஸ்வரி |

| தென்காசி மாவட்டம் | | |
|---|---|---|
| 51. சிவகிரி | 2 | பி.பாலசுப்பிரமணியன் |
| | 3 | பி.மாரியப்பன் |
| | 4 | பி.விஜயலட்சுமி |
| | 9 | பி.அருணாசலம் |
| 52. ஆழ்வார்குறிச்சி | 12 | செ.ராசாத்தி |
| 53.ஆய்க்குடி | 6 | கா.பழனிகுமார் |

| தேனி மாவட்டம் | | |
|---|---|---|
| 54. காமகவுண்டன்பட்டி | 13 | எஸ்.முத்துசெல்வி |















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 12.02.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் பட்டியல்

## மாநகராட்சி

### 1. சென்னை

| வார்டு | வேட்பாளர் |
|---|---|
| 193 | எஸ். ஏழுமலை |
| 42 | எம்.ரேணுகா பி.இ. |
| 84 | ஆர்.விஜயக்குமார் |

### 2. ஆவடி

| | |
|---|---|
| 25 | எஸ்.மயில்வாகனன் |

### 3. கோயமுத்தூர்

| | |
|---|---|
| 41 | கே.சாந்தி |
| 48 | ஆர்.பிரபா |
| 43 | பி.மல்லிகா |
| 53 | எம்.டி.மோகன் |

### 4. திருப்பூர்

| | |
|---|---|
| 7 | எம்.வானதி மகாலிங்கம் |
| 11 | எஸ்.செல்வராஜ் |
| 23 | என்.துளசிமணி நடராஜன் |
| 27 | எஸ்.ரவிச்சந்திரன் |
| 31 | ஏ.ராஜேந்திரன் |
| 37 | ஆர்.பாலசுப்ரமணியம் |
| 54 | சி.அருணாசலம் |
| 56 | காட்டே சி.ராமசாமி |

### 5. ஓசூர்

| | |
|---|---|
| 26 | அருணா சின்னசாமி |
| 19 | எம்.கே.மாதையன் |
| 7 | ஐ.நூர்முகம்மது |
| 24 | எ.அமினா கௌசல் (பொது) |

### 6. சேலம்

| | |
|---|---|
| 21 | பி.பெருமாள் |

### 7. ஈரோடு

| | |
|---|---|
| 11 | எஸ்.டி.பிரபாகரன் (பொது) |

### 8. திருச்சி

| | |
|---|---|
| 23 | க.சுரேஷ்குமார் |
| 65 | பி.ராஜா |

### 9. தஞ்சாவூர்

| | |
|---|---|
| 15 | கே.கல்யாணி |

### 10. கும்பகோணம்

| | |
|---|---|
| 7 | மு.அ.பாரதிமுருகன் |

### 11. சிவகாசி

| | |
|---|---|
| 25 | மா.முனியசாமி |

### 12. மதுரை

| | |
|---|---|
| 26 | முத்துசுமதி கண்ணன் |

### 13. தூத்துக்குடி

| | |
|---|---|
| 23 | நி.தனலெட்சுமி. |

### 14. திருநெல்வேலி

| | |
|---|---|
| 22 | பொ.கிருஷ்ணன் |

**14 மாநகராட்சிகளில் 30 வேட்பாளர்கள்**

## நகராட்சி

### திருவள்ளூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1.திருவள்ளூர் | 1 | டி.லோகநாதன் |
| | 6 | எம்.குமரன் |
| 2.பொன்னேரி | 16 | எம்.வினோபா |

### கடலூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 3.பண்ருட்டி | 13 | குணசுந்தரி குணசேகரன் |

### வேலூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 4.திருப்பத்தூர் | 35 | விஜி |

### கோவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 5.மேட்டுப்பாளையம் | 20 | லதா |
| | 30 | முகமது ரியாஸ் |
| 6.வால்பாறை | 1 | எஸ்.மோகன் |
| | 21 | ஜீவாலட்சுமி |
| 7.கருமத்தம்பட்டி | 14 | நோயல் விஜய் |
| 8.பொள்ளாட்சி | 12 | ஆர்.மயில்சாமி |

### திருப்பூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 9. திருமுருகன் பூண்டி | 1 | பி.மகேஸ்வரி |
| | 15 | என்.கதிர்வேல் |
| | 17 | ஆர்.சிவகாமி |
| | 19 | எஸ்.கோகிலா |
| | 20 | பி.ராஜேஸ்வரி |
| | 24 | கே.லீலாவதி |
| 10. உடுமலை | 8 | ஆர்.சித்ராரணதேவ் |

### சேலம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 11.நரசிங்கபுரம் | 2 | என்.எம்.சடையன் |

### ஈரோடு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 12.பவானி | 11 | சி.மணி |
| | 20 | கே.கல்பனா |
| 13.கோபி | 18 | கே.சௌந்தர்யா |

### நாமக்கல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 14. திருச்செங்கோடு | 9 | பி.கார்த்திக் |
| 15.ராசிபுரம் | 10 | எஸ்.மீனா |
| 16.நாமக்கல் | 3 | கே.என்.சுந்தரம் |
| 17.குமாரபாளையம் | 18 | ஜி.யுவராணி |

### கிருஷ்ணகிரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 18.கிருஷ்ணகிரி | 27 | முகமது இப்ரித் |

### திருச்சி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 19. மணப்பாறை | 19 | த.தங்கமணி |
| | 20 | த.மனோன்மணி |
| 20.துவாக்குடி | 10 | கே.பழனிச்சாமி |
| | 12 | ஜி.ஆர்.பிரகாஷ் |
| 21.லால்குடி | 22 | கே.குணசேகரன் |
| 22.முசிறி | 8 | வி.பி.சண்முகம் |

### தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 23.பட்டுக்கோட்டை | 29 | சி.அஜய்குமார் கோஷ் |
| 24.அதிராம்பட்டினம் | 19 | ஹா.தில்நவாஸ்பேகம் |

### மயிலாடுதுறை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 25.மயிலாடுதுறை | 6 | எம்.எஸ்.ஷேக் இஸ்மாயில் |
| 26.சீர்காழி | 4 | பி.இளமதியன் |
| | 13 | பி.ஜெகதீஸ்வரன் |
| 27. வைத்தீஸ்வரன் கோயில் | 2 | வித்தியாதேவி |
| | 3 | எஸ்.ராமச்சந்திரன் |

### நாகப்பட்டினம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 28.நாகப்பட்டினம் | 15 | கு.ஜோதிலெட்சுமி |

### புதுக்கோட்டை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 29.புதுக்கோட்டை | 1 | எம்.என்.இராமச்சந்திரன் |

### திண்டுக்கல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 30.பழனி | 2 | டி.பார்வதி |

### தேனி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 31.தேனி-அல்லி நகரம் | 8 | எம்.கர்ணன் |
| 32.போடிநாயக்கனூர் | 30 | கே.பெருமாள் |
| 33.சின்னமனூர் | 5 | இரா.தமிழ்பெருமாள் |
| 34.கூடலூர் | 19 | ம. ராமர் |

### விருதுநகர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 35.இராஜபாளையம் | 38 | எம்.முத்துப்பாண்டிசெல்வி |

### சிவகங்கை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 36.காரைக்குடி | 26 | கே.மஞ்சுளா |
| 37.மானாமதுரை | 19 | என்.சங்குமுத்து |

### இராமநாதபுரம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 38.இராமநாதபுரம் | 27 | ஏ.ஷர்மிளா |
| 39.இராமேஸ்வரம் | 9 | சி.ஆர்.செந்தில் வேல் |
| 40.பரமக்குடி | 10 | என்.எஸ்.பெருமாள் |
| | 15 | டாக்.எஸ்.வரதராஜன் |

### தூத்துக்குடி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 41. கோவில்பட்டி | 17 | கி.சரோஜா |
| | 32 | டி.முனியசாமி |

### திருநெல்வேலி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 42.விக்கிரமசிங்கபுரம் | 15 | நா.பாஸ்கரன் |
| 43.களக்காடு | 7 | சு.சுபேதா |

### தென்காசி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 44.தென்காசி | 11 | க.கற்பகவள்ளி |
| 45.புளியங்குடி | 29 | ச.பாக்கியம் |
| 46.சங்கரன்கோவில் | 4 | ஆ.ஆனந்தவடிவு |
| 47.கடையநல்லூர் | 8 | எம்.சரஸ்வதி |
| 48.செங்கோட்டை | 20 | சு.மீனா |

**48 நகராட்சிகளில் 63 வேட்பாளர்கள்**

## பேரூராட்சி

### திருவண்ணாமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1.செங்கம் | 14 | எஸ். சர்தார் |

### திருப்பூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 2. ஊத்துக்குளி | 2 | கே.கே.செல்வி |
| | 13 | வி.ஏ.சரவணன் |

### கோவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 3. கண்ணம் பாளையம் | 1 | கு.பழனிவேல் |
| | 2 | பி.சுப்ரமணியன் |
| | 3 | ம.கிருஷ்ணவேணி |
| | 8 | ஆ.சரஸ்வதி |
| | 9 | பா.கற்பகம் |
| | 10 | ஈ.லதாமணி |
| | 12 | பெ.மௌனசாமி |
| | 13 | இரா.மாலதி |
| | 14 | ஜீ.மனோன்மணி |
| | 15 | மௌ.மனோன்மணி |
| 4. பள்ளபாளையம் | 12 | பி.ஜெகதீஸ்வரி |
| 5. இருகூர் | 6 | ராஜதம்புதுரை |
| | 7 | வீராசாமி |
| | 15 | எஸ்.கமலம் |
| 6. கோட்டூர் | 6 | வெள்ளையம்மாள் |
| | 11 | கார்த்திகா |
| | 13 | தர்மராஜ் |
| | 21 | மருதாள் |
| 7.ஆனைமலை | 3 | மஸ்தீன் |
| 8.வேடபட்டி | 10 | என்.கார்த்திகா |
| 9.மூப்பேரிபாளையம் | 2 | பி.ஆர்.பழனிசாமி |
| 10. நரசிம்ம நாயக்கன் பாளையம் | 9 | வி.சரஸ்வதி |
| 11. அன்னூர் | 5 | அப்துல்வகாப் |
| | 2 | எச்.அபுதாகீர் |

### ஈரோடு தெற்கு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 12.பெருந்துறை | 12 | ஆர்.பானுமதி |
| 13. காஞ்சிக் கோவில் | 1 | கே.சீரப்பன் |
| 14. புஞ்சை கிளாம்பாடி | 7 | செந்தில் ஆண்டவர் |

### ஈரோடு வடக்கு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 15. ஜம்பை | 14 | ஏ.சுபிதா பேகம் |
| 16.பவானிசாகர் | 13 | ஜி.கவிதா |

### சேலம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 17.செந்தாரப்பட்டி | 7 | கலையரசி மாவீரன் |
| 18.மல்லூர் | 6 | பி.ஜெகதீசன் |
| 19.நங்கவள்ளி | 14 | கே.கார்திக் |
| 20.வனவாசி | 12 | எஸ்.சதிஷ்ராஜா |
| 21.ஜலகண்டபுரம் | 2 | எம்.கோகுலகிருஷ்ணன் |

### நாமக்கல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 22.வெண்ணந்தூர் | 13 | பி.ஜெயபால் |
| 23. காளப்ப நாயக்கன்பட்டி | 12 | அதினாகுமரேசன் |

### கிருஷ்ணகிரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 24. தேன்கனிக் கோட்டை | 04 | வி.பர்வதம்மா |
| | 08 | பர்வீன்தாஸ் |
| | 09 | எச்.அகமது பேக் |
| | 13 | ஏ.கௌரி லட்சுமி |
| | 15 | கே.ஜெயந்த் |
| 25. கெலமங்கலம் | 01 | தனலட்சுமி நாகராஜ் |
| | 05 | ஜி.பரத்குமார் |
| | 09 | வி.எல்லம்மா |
| | 11 | எஸ்.கங்கேஸ் |
| | 13 | எல்.முனிராஜ் |
| | 14 | நசீமா சாதிக் |
| 26. நாகோஜன ஹள்ளி | 05 | என்.வி.இமயம் |
| | 14 | டி.பி.லலிதா |
| | 06 | தேன்மொழி ராமமூர்த்தி |

### திருச்சி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 27.கூத்தைப்பார் | 18 | ஜெ.வைசூர்யா |
| 28. பாலகிருஷ்ணன் பட்டி | 8 | கமலம் ஆண்டி |

தொடர்ச்சி 15ம் பக்கம் >>

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.